# வானவில்

# VAANAVIL

இதழ் 128 | ஆவணி 2021

ISSUE 128 | AUGUST 2021



# தடுப்பூசி ஏற்றிக்கொள்வதே ஒரே வழி!

இலங்கையில் கோவிட் –19 தொற்றால் நாளொன்றுக்கு 200 மரணங்கள் வரையில் பதிவாகின்றன. இதுவரையில் மொத்தமாக 8400 மேற்பட்டோர் கொரோனாவிற்கு பலியாகியுள்ளனர். 60 வயதுக்கு மேற்பட்டவர்களே அதிகமாக மரணிக்கின்றனர். கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்தைத் தாண்டியும், இதில் பூரண குணமடைந்தவர்கள் மூன்றரை இலட்சம் பேராகவும் உள்ளனர். உலகில் கொரோனாவால் பாதிப்பு அடைந்தோரின் எண்ணிக்கைகள் பட்டியலில் இலங்கை தற்போது 59வது இடத்தில் உள்ளது. ஒரு நாட்டின் சனத்தொகையோடு ஒப்பிடுகையில் மிகக்கூடிய மரணங்கள் பதிவு செய்யப்பட்ட நாடாக இலங்கை இப்போது பதிவாகி இருக்கின்றது.

கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் அதிகரித்து வருவததால் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலுமுள்ள மருத்துவமனைகள் மற்றும் கொழும்பிலுள்ள தனியார் வைத்திய நிலையங்கள் நிரம்பி வழிகின்றன. இவ்வாறான நிலையில் கோவிட்–19 பரவலின் உக்கிரத்தைத் தடுப்பதற்கு மக்களை வீடுகளுக்குள் முடக்க வேண்டும். அதனால் அரசாங்கம் மக்களை வீடுகளுக்குள் இருக்குமாறு தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்தது.

இதற்கு அடுத்தபடியாக முடக்கநிலையை அறிவிக்க வேண்டும். ஆனால் நாட்டை முடக்கினால், மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும், இன்றைய நிலையில் நாட்டை மூடினால் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படும், வாழ்வாதாரத்துக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும், போன்ற அச்சங்கள் இருந்ததால் அரசாங்கம் முதலில் அதனை விரும்பவில்லை.

எனினும் அஸ்கிரிய, மல்வத்து மகாநாயக்கர்கள், ஆளும் கட்சியினரின் ஒருபகுதியினர், எதிர்க்கட்சிகள் மற்றும்



மருத்துவ அமைப்புகள் விடுத்த வேண்டுதல்களை அடுத்து, ஓகஸ்ட் 20 இலிருந்து ஓகஸ்ட் 30 வரை நாடு தழுவிய முடக்கநிலையை (Lockdown) அமுல்படுத்துவதாக அரசு அறிவித்தது. தற்போது இந்த முடக்கநிலையை செப்டம்பர் 6 வரை நீடிப்பதாக அரசு மறு அறிவிப்பொன்றினையும் வெளியிட்டுள்ளது.

கடந்த வருடம் மார்ச் 10ம் திகதியே கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான முதலாவது இலங்கைப்பிரஜை இலங்கைக்குள் அடையாளம் காணப்பட்டார். இத்தாலியிலிருந்து இலங்கைக்கு வருகைத் தந்த சுற்றுலா பயணிகளுக்கு வழிகாட்டியாக செயற்பட்ட ஒருவரே இந்த வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியதாக அப்போது சொல்லப்பட்டது. அதனால் இலங்கை உடனடியாகவே சுற்றுலாப் பிரயாணிகளின் வருகைகளை நிறுத்தி, விமான நிலையங்களை மூடியதோடு மாத்திரமல்லாது, நாட்டின் முதலாவது முடக்கநிலையையும் அறிவித்தது.

கொரோனா அச்சுறுத்தலில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில் இலங்கை அரசு, முதலாவது கோவிட் தொற்றாளர் இனங்காணப்பட்டவுடனேயே முடக்கநிலையை அறிவித்ததால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் முடங்கியது. பின்னர், கொரோனா தாக்கம் குறையத் தொடங்கியதும் படிப்படியாக முடக்கநிலைத் தளர்வு அறிவிக்கப்பட்டது. இலங்கையில் முதலாவது கொரோனா அலையின் போது தடுப்பூசிகள் இல்லாததால், தனிநபர் இடைவெளி மற்றும் முகக்கவசம் மூலமாக மட்டுமே கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, பிரேசில் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் கொரோனா மரணங்கள் நாளொன்று ஆயிரக்கணக்காக இருக்கையில், அந்நாடுகள் பல மாதங்களாக முடக்கப்பட்டன. அக்காலப்பகுதியில் இலங்கையின் முன்னேற்பாடான பல நடவடிக்கைகள் காரணமாக பாதிப்பு குறைவாக இருப்பதாக உலக சுகாதார சபையால் பாராட்டப்பட்ட நாடு இலங்கை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் முதலாவது கொரோனா

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

# பெகாசஸ் இணையவழி 'பெரியண்ணன்'

தற்போது இந்தியா உட்பட உலக அரசியலை உலுக்கிவரும் வார்த்தை பெகாசஸ் (pegasus). பெகாசஸ் என்பது இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த என்.எஸ்.ஓ (NSO) நிறுவனத்தின் இராணுவ ஒட்டுக்கேட்பு மென்பொருள் (spyware). இந்த மென்பொருளின் துணையுடன் உலகம் முழுவதும் ஐம்பதினாயிரம் பேரின் கைத்தொலைபேசிகள் ஒட்டுக்கேட்கப்பட்டுள்ளதாக பிரான்ஸைச் சேர்ந்த இலாப நோக்கமற்ற அமைப்பான ஃபர்பிடன் ஸ்டோரிஸ் (Forbidden Stories) மற்றும் அம்னெஸ்டி இன்டர்நேஷனல் (Amnesty International) ஆகியன 16 ஊடகங்களுடன் இணைந்து புலனாய்வு செய்து கண்டுபிடித்துள்ளன.

இந்தியாவில் மட்டும் சுமார் 40 பத்திரிகையாளர்கள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள், அரசு அதிகாரிகள், ராகுல் காந்தி, பிரசாந்த் கிஷோர் உட்பட 300 இற்கும் மேற்பட்டவர்களின் கைத்தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்பட்டுள்ளதாக 'தி வயர்' (The Wire) என்ற இணையப் பத்திரிகை கூறுகின்றது.

பெகாசஸ் மென்பொருள் அதிநவீன தொழில்நுட்பத்தில் இயங்குகின்றது. எப்போதுமே உளவுப் பார்க்கும் வசதிகளில் சக்தி வாய்ந்த முதல் தர நாடாக இருக்கின்ற இஸ்ரேல் அரசு, பெகாசஸை 'இணையவழி ஆயுதம்' என்றுதான் அழைக்கிறது. அந்தளவுக்கு எளிதாக ஊடுருவி ஒருவரின் அந்தரங்கத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

கைத்தொலைபேசிக்கு வரும் தீங்கிழைக்கக்கூடிய இணைப்பைத் தெரியாமல் தொட்டுவிட்டாலோ அல்லது கைத்தொலைபேசிக்கு வரும் குறுஞ்செய்திகள் மூலமாகவோ பெகாசஸ் மென்பொருள் கைத்தொலைபேசிக்குள் நுழைந்து விடுகின்றது. பின்னர் கைத்தொலைபேசி பயனாளர்களுக்குத் தெரியாமலேயே, இந்த மென்பொருள் தன்னைப் பதிவிறக்கம் செய்து, வெகுதொலைவில் இயக்கும் நபரின் கேள்விகளுக்குத் தேவையான பதில்களையும், தகவல்களையும் திருடி, இந்த மென்பொருள் வழங்கும்.

ஒரு முறை தொலைப்பேசியில் பெகாசஸ் நிறுவப்பட்டால் தொடர்பில் இருக்கும் இருவருக்குமான செய்திப் பரிமாற்றத்தை இடைமறித்து ஒட்டுக்கேட்கும் உங்கள் தொலைப்பேசியில் இருந்து குறுஞ்செய்தி, மின்னஞ்சல், தொடர்பு, நாட்காட்டி, கடவுச்சொல், அழைப்பு பற்றிய தகவல், பார்க்கப்பட்ட இணையங்களின் தரவுகள், தேடுப்பொறி வரலாறு போன்ற அனைத்தும் திருடப்பட்டு, உங்களின் அனுமதியின்றி மூன்றாம் நபருக்கு அனுப்பிவிடும். நீங்கள் பேசுவதையும் பதிவு செய்யும், மறைமுகமாக உங்களின் கமராவை இயக்கி உளவு பார்க்கும், ஜி.பி.ஸ் மூலம் நீங்கள் இருக்கும் இடத்தையும் அனுப்பும். இப்படி பல்வேறு உளவு வேலைகளை உங்களின் அனுமதியின்றி செய்யும் ஆற்றல் இந்த பெகாசஸுக்கு உள்ளது.

ஒரு கைத்தொலைபேசியிலிருந்து பெகாசஸ் மென்பொருள் அழிக்கப்படும்போது அது பயன்படுத்தப்பட்டதற்கான தடையங்களும் சேர்ந்தே அழிந்து விடுகின்றன. இதனால், பாதிக்கப்பட்ட கைத்தொலைபேசிகளைக் கண்டறிவது கடினமாக இருந்திருக்கிறது. ஆனால் தற்போது சில கைத்தொலைபேசிகளில் பெகாசஸை நீக்கும்போது சில தடயங்களை அந்த மென்பொருள விட்டுச் செல்வதாகக் கூறப்படுகிறது. இதனை வைத்தே பெகாசஸ் ஊடுருவலை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்

என்.எஸ்.ஓ அமைப்பு இதுவரை தன்னுடைய உளவு மென்பொருளை எந்தெந்த நாடுகள் பயன்படுத்துகின்றன என்பதை வெளிப்படையாக அறிவிக்கவில்லை. ஆனால், இந்த மென்பொருள் பெரும்பாலும், ஒரு நாட்டின் அரசுக்கே அதிகாரபூர்வமாக விற்கப்பட்டுள்ளது. ஓராண்டுக்கு இந்த மென்பொருளைப் பயன்படுத்துவதற்கு கட்டணமாக 70 முதல் 80 இலட்சம் டொலர்கள் செலுத்த வேண்டும்.

சவூதி அரேபியாவைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் கஷோக்ஜி (Jamal Khashoggi), கடந்த 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், துருக்கி இஸ்தான்புல்லில் உள்ள சவூதி அரேபியா துணை தூதரகத்துக்குச் சென்றபோது கொலை செய்யப்பட்டார். அவர் கொலை செய்யப்படுவதற்கு முன்பு அவரது கைத்தொலைபேசி மூலம் அவரது நடமாட்டமும், கொலை செய்யப்பட்டதற்குப் பின்பு, அவரது குடும்பத்தினரின் கைத்தொலைபேசிகளும் பெகாசஸ் மூலம் உளவு பார்க்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

பெகாசஸ் விவகாரம் தொடர்பாக மத்திய அரசு உரிய நீதி விசாரணை நடத்த வேண்டும், பாராளுமன்றத்தில் விவாதம் நடத்த முன்வர வேண்டுமென்று என்று காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. 'விசாரணை நடத்துவதில் மத்திய அரசுக்கு என்ன தயக்கம் இருக்கிறது? ஏன் ஓடி ஒளிகிறார்கள்?' என்று காங்கிரஸ் கட்சி தலைவர்களான ராகுல் காந்தி, ப.சிதம்பரம் போன்றோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதன் நோக்கமும், இது பயன்படுத்தப்படும் விதமும் மிகவும் தெளிவானது. ஆட்சியில் இருப்பவர்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ளும் விதத்தில், எதிர்க்கட்சியினரைப் பலவீனப்படுத்திடவும், ஊடகங்களில் வெளிவரும் மாற்றுக்கருத்துகளைக் கண்காணித்திடவுமே இது பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது.

இன்று கண்காணிப்பு (surveillance) தொழில்நுட்பம் வர்த்தகம் ஆகியுள்ளது. இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மக்களை உளவு பார்த்து அச்சுறுத்தும் அரசும், எமது தனிப்பட்ட தகவல்களை திருடி வணிகமாக்கும் முதலாளித்துவப் பொருளாதார முறைகளும் கைகோர்க்கையில், இன்றைய நவதாராளவாத உலகில் எதேச்சதிகாரம் சுலபமாகிவிடுகிறது. தொழில்நுட்பம் சார்ந்த இத்தகைய எதேச்சதிகார அரச கட்டமைப்புக்கு எதிராக மக்கள் எப்படிப் போராடப்போகிறார்கள் என்பதுதான் இன்று எமக்கு முன்னால் விடுக்கப்பட்டிருக்கும் சவால்!

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# தலிபான்களை வளர்த்துவிட்டது முதல் ஆப்கானிஸ்தான் மக்களைக் கைவிட்டது வரை!

உலகில் எங்கு பார்த்தாலும் தலிபான்கள் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றிய செய்திகளே நிரம்பி வழிகின்றன. ஆப்கன் மக்களைத் தாண்டி பிற நாட்டு மக்களும் பீதியில் உறைந்துள்ளனர். 20 ஆண்டுகளாக ஆப்கனில் காலூன்றியிருந்த அமெரிக்கப் படையினர் நாடு திரும்பிவிட்டனர். ஆப்கன் அதிபர் அஷ்ரஃப் கானியும் (Ashraf Ghani) தப்பி ஓடிவிட்டார். ஒருபுறம், 'அமெரிக்கா எங்களைக் கைவிட்டுவிட்டது' என்ற ஆப்கன் மக்களின் ஆதங்கத்துக்கு, மறுபுறம் 'நாங்கள் ஆப்கனை மறுகட்டமைப்பதற்காக ஒன்றும் அங்கு செல்லவில்லை, அது எங்கள் நோக்கமும் இல்லை. எங்களுக்கு எங்கள் இராணுவ வீரர்களின் உயிர்தான் முக்கியம்' என்ற அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் பதிலடி வாதமும் கொடுக்கப்பட்டு விட்டது.

**அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பேசியது என்ன?**

"ஆப்கானிஸ்தானைக் கட்டமைக்கும் பணிக்காக அமெரிக்கப் படைகள் அங்கு செல்லவில்லை, அது எங்கள் வேலையும் இல்லை. அல்கைடாவை (Al Qaida) முறியடிக்கவும், ஒசாமா பின்லாடனைப் பிடிக்கவுமே இந்தப் போர் நடைபெற்றது. எப்போது அமெரிக்கப் படைகளை வாபஸ் வாங்கியிருந்தாலும் இதுதான் நடந்திருக்கும். இன்னும் எத்தனை தலைமுறை அமெரிக்கப் பிள்ளைகளை ஆப்கன் உள்நாட்டுப் போருக்கு நாங்கள் அனுப்ப வேண்டும்? கடந்த காலத்தில் நடந்த தவறுகளை நான் தொடர விரும்பவில்லை" என்றிருக்கிறார். இவற்றையெல்லாம் இப்போதைய சூழலோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அமெரிக்காவின் பக்கம் நியாயம் இருப்பதாகவே தோன்றும். ஆனால், வரலாற்றை ஆராயும்போதுதான் இதற்கெல்லாம் முழுமுதற் சூத்திரதாரி யார் என்ற உண்மை புலப்படும்.

**வரலாற்றைக் கொஞ்சம் திரும்பிப் பார்க்கலாமா..?**

1945, இரண்டாம் உலகப்போர் முடிவடைந்தபோது, உலக நாடுகள் பலவும் அமெரிக்கா, ரஷ்யா ஆகிய இரு வல்லாதிக்க நாடுகளின் தலைமையில் இரு அணிகளாகப் பிளவுபட்டன. அவற்றில் இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் அணிசாரா நாடுகளாக ஒதுங்கிக் கொண்டன. அமெரிக்கா



முதலாளித்துவத்தையும், ரஷ்யா கம்யூனிசத்தையும் முன்னிறுத்தி கருத்தியலில் முரண்பட்டன. விளைவு, இரண்டாம் உலகப்போர் முடிவுற்று இரண்டே ஆண்டுகளில் 1947இல் மீண்டும் போர் மூண்டது. ஆனால் அது மூன்றாம் உலகப்போராக இருக்கவில்லை. காரணம், இந்தப் போர் சற்று வித்தியாசமானது. அதாவது, பனிப்போர். புரியும்படியாகச் சொல்ல வேண்டுமென்றால், முதலாம் – இரண்டாம் போர்களில் நேரடியாக பங்கேற்று கோடிக்கணக்கில் உயிரிழப்பையும் பொருளிழப்பையும் சந்தித்துப் பாடம் கற்ற வல்லரசு நாடுகள், இம்முறை சற்று சுதாரித்துக் கொண்டன. தாங்கள் நேரடியாகப் போரில் பங்கேற்காமல், தங்கள் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாதபடி களத்தை மாற்றிக் கொண்டன. அதாவது, இரண்டாம் கட்ட நாடுகளைத் தங்கள் போர்க்களங்களாகவும், அந்நாட்டு இராணுவம் அல்லது புரட்சிக்குழுவை தங்களின் பகடைகளாகவும் பயன்படுத்திக் கொண்டு, மறைமுகமாகத் தங்களுக்குள் போரிட்டன.

*ரா.அரவிந்தராஜ்*

உலகில் கம்யூனிசம் எந்த மூலையில் தலைதூக்கினாலும், அங்கு அமெரிக்கா சென்று எதிர்க்கும், முடக்கும் என்பதை வெளிப்படையாகவே அந்நாடு அறிவித்தது. இதை அடியொற்றித்தான், கிழக்கு ஐரோப்பிய (East bloc) நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட்டுகளை ஆதரித்து, அங்கு தனக்குச் சார்பான அரசை ரஷ்யா ஏற்படுத்தியபோது, அமெரிக்கா மேற்கு ஐரோப்பிய (West block) நாடுகளை ஒன்றிணைத்து ரஷ்யாவுக்கு எதிராகத் திருப்பிவிட்டது. அதில் அமெரிக்கா வெற்றியும் கண்டது. அதேபோல் கியூபாவின் பக்கம் ரஷ்யா திரும்பியபோதும் அங்கு முட்டுக்கட்டை போட்டது. கருத்தியலைக் கடந்து, தொழில்நுட்பம், படைபலம், விண்வெளிக்குச் செல்லும் போட்டி என எல்லாவற்றிலும், யார் உலகின் அதிபதி என்ற அதிகாரப் போட்டியாக முற்றியது.

அமெரிக்கா எதிர் ரஷ்யா இடையே முற்றிய உரசல், தொடர்ந்து அடுத்தடுத்த நாடுகளுக்கும் தங்களின் களத்தை விரிவாக்கிக் கொண்டே சென்றது. வடக்கு வியட்நாமுக்கு ரஷ்யா, தெற்கு வியட்நாமுக்கு அமெரிக்கா, வடகொரியாவுக்கு ரஷ்யா, தென்கொரியாவுக்கு அமெரிக்கா என பிளவுபட்ட நாடுகளிலும் தங்கள் சதுரங்க ஆட்டத்தை நடத்திக்கொண்டன. (அதில் வியட்நாம் ஒன்றிணைந்து, அமெரிக்காவை ஓடவிட்டது தனிக்கதை.) இது மாதிரியான போரைத்தான் வரலாறு பனிப்போராகப் பதிவு செய்கிறது. அப்படியான ஒரு போரில், பகடையாக மாட்டிக்கொண்ட நாடுதான் ஆப்கானிஸ்தான்!

**அமெரிக்க – ரஷ்ய பனிப்போரில் பலிக்கடாவான ஆப்கானிஸ்தான்**

1970களின் பிற்பகுதியில், 'ஆப்கானிஸ்தான் குடியரசு' (Republic of Afghanistan) எனும் பெயரில் ஒரு கம்யூனிச ஆட்சியை வழி நடத்திவந்தார் ஆப்கானிஸ்தான் அதிபர் தாவுத் கான். அவரின் அரசியல் படுகொலைக்குப் பிறகு, அதிபரான நூர் முகமது தாராகி (Noor Mohammad Taraki), 'ஆப்கானிஸ்தான் ஜனநாயகக் குடியரசு' (Democratic Republic of Afghanistan) எனும் பெயரில், ரஷ்ய ஆதரவுள்ள ஒரு கம்யூனிச ஆட்சியே நடத்தி வந்தார். இருவருமே, ஆப்கன்

அரசை மத அடிப்படையில் கொண்டு செல்லாமல், நிலச் சீர்திருத்தங்கள், பேச்சுரிமை, பெண்ணுரிமை என கம்யூனிசக் கொள்கைகளையே வழிமொழிந்தனர். இவற்றினை எதிர்க்கும் இஸ்லாமிய மதவாதிகளைச் சிறையிலடைத்தனர். அவர்களுக்குப் பிறகு வந்த அடுத்தடுத்த அதிபர்களும் ஆப்கானிஸ்தானை ஒரு கம்யூனிச நாடாக்கவே முயன்று வந்தனர். இது போன்ற செயல்பாடுகளால் எரிச்சலடைந்த மத அடிப்படைவாதிகள், கம்யூனிச அரசுக்கெதிராக கிளர்ந்தெழுந்தனர். இது போதாதா அமெரிக்காவின் பார்வை ஆப்கன் மண்ணில் விழுவதற்கு!

ரஷ்யா அரசுப் பக்கம் நின்றால், அமெரிக்கா கிளர்ச்சிக்குழுக்கள் பக்கம் நிற்கும். ரஷ்யா புரட்சிக்குழுக்கள் பக்கம் நின்றால், அமெரிக்கா அரசு பக்கம் நிற்கும். அவர்கள் யாராக இருந்தாலும் அது பற்றி அமெரிக்காவுக்குக் கவலையில்லை, ரஷ்யாவுக்கு எதிரணியில் இருந்தாலே போதும்.

**தலிபான்களை வளர்த்துவிட்டது யார்?**

அமெரிக்கா, தனது பரம எதிரியான ரஷ்யாவை வீழ்த்துவதற்கு, தனது முஜாஹிதீன் அம்புகளை உடலளவிலும், மனதளவிலும் கூர்தீட்டியது. 'தூய இஸ்லாத்தைக் காக்க, நாத்திக கம்யூனிச அரசை வீழ்த்துவது ஒன்றே வழி' என்ற முறையில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆப்கன் கம்யூனிச அரசுக்கெதிராக ஒன்று சேர்ந்தவர்கள் 'முஜாஹிதீன்' எனும் அமைப்பாக அணி திரண்டனர். இதை தனக்குச் சாதமாகப் பயன்படுத்திக்கொண்ட அமெரிக்கா, முஜாஹிதீன்களுக்கு ஆயுத உதவியையும், பொருளாதார உதவியையும் குறைவில்லாமல் கொட்டிக்கொடுத்தது. மேலும், அவர்களுக்கு ஏதுவாக அண்டை நாடான பாகிஸ்தானில் பயற்சி முகாம்களை அமைத்துக்கொடுத்து, முறையான இராணுவப் பயிற்சியும் அளித்தது. அதுமட்டுமல்லாமல், அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ., பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ–யுடன் இணைந்து ஆப்கன்–பாக் எல்லைப் பகுதிகளில் மதரஸாக்களை ஏற்படுத்தி, அங்கு மத குருமார்களைக்கொண்டு, இஸ்லாமிய மத போதனைகளும் வழங்கப்பட்டன. தலிபான்களின் இஸ்லாமிய ஷரியத் சட்டங்களின் பிறப்பிடமே அந்த மதரஸாக்கள்தான்.

அமெரிக்காவின் உந்துதலில் சவூதி அரேபியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளும் முஜாஹிதீன்களை ஆதரித்தன. ரஷ்யாவுடன் இருந்த எல்லைப் பிரச்சனையின் காரணமாக, கம்யூனிச நாடான சீனாவும் முஜாஹிதீன்களுக்கு ஆதரவாகக் களமிறங்கியது. ஒருபடி மேலே சென்று, அமெரிக்கா முஜாஹிதீன்களின் முக்கியத் தளபதிகளை தனது நாட்டுக்கே அழைத்துச் சென்று பயிற்சியும் வழங்கிய விநோதமும் நடந்தேறியது. சாதாரண கிளர்ச்சிக்குழுக்களாக இருந்த முஜாஹிதீன்களை, சக்திவாய்ந்த ஆயுதபாரிகளாக மாற்றிய பெரும்பங்கு அமெரிக்காவையே சாரும். முஜாஹிதீன் அமைப்புக்குத்தானே அமெரிக்கா உதவியது, இதில் தலிபான் எங்கிருந்து வந்தது? என்ற கேள்வி எழலாம். இந்தக் கேள்வியிலேயே பதிலும் அடங்கி இருக்கிறது. அதைப் பின்னால் பார்ப்போம்.

1979 போர் தொடங்கியது. முஜாஹிதீன்களின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல், ஆப்கானிஸ்தான் கம்யூனிச அரசு தடுமாறிக் கொண்டிருந்தது. இனியும் தாமதித்தால் ஆப்கன் அரசு வீழும் என்பதை உணர்ந்த ஆப்கானிஸ்தான் கம்யூனிச அரசு, 1978இல் ரஷ்யாவுடன் ஆப்கன் போட்ட போர் உதவி ஒப்பந்தத்தின்படி, ரஷ்யாவை உதவிக்கு அழைத்தது. 1979 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31இல் ரஷ்யப் படைகள் ஆப்கானிஸ்தானிக்குள் புகுந்தன.

மலைக்குன்றுகளிலிருந்து மறைந்து தாக்கும் முஜாஹிதீன்களின் கெரில்லா போர்முறையில், ரஷ்யப்படைகளின் வேகத்தைக் குறைத்தன. ரஷ்யத் தரப்பில் மேலும் ஒரு இலட்சம் படையினர் ஆப்கானிஸ்தானில் குவிக்கப்பட்டனர். ஆரம்பத்தில் ரஷ்யப் படைகளின் வருகையை வரவேற்ற ஆப்கன் மக்கள், போரில் இலட்சக்கணக்கான இஸ்லாமியப் பொதுமக்கள் கொல்லப்படுவதைக் கண்டு ரஷ்யாவுக்கு எதிராக மாறினர்.

ரஷ்யாவுக்கு எதிரான போரில் சவூதி அரேபியாவைப் பிறப்படமாகக் கொண்ட ஒசாமா பின்லாடனும் அமெரிக்கா ஆதரவுடன் களமிறங்கினார். ரஷ்யப் படைகள் மீதான எதிர்ப்பலை, மத்திய ஆசியாவிலிருக்கும் ஏனைய இஸ்லாமிய நாடுகளின் இளைஞர்கள மத்தியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. விளைவு, 1985 ஆம் ஆண்டுவாக்கில் ஏராளமான இஸ்லாமிய இளைஞர்கள் முஜாஹிதீன் அமைப்பில் தங்களை இணைத்துக கொண்டனர். சிறு சிறு குழுக்களாகச் செயல்பட்டுவந்த ஏழு முஜாஹிதீன் அமைப்பினர் கூட்டமைப்பாக வலுப்பெற்றனர். இன்னும் அதிகமான ஆயுதங்களும், பொருளாதார உதவியும் தொடர்ந்து அமெரிக்க அரசால் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தன. அமெரிக்க வரலாற்றிலேயே, மிகப்பெரிய அளவிலான பொருளாதாரத்தை, முஜாஹிதீன்களை உருவாக்குவதிலேயே செலவிட்டது சி.ஐ.ஏ.

தொடர்ந்து தீவிரமடைந்துவந்த போரில், சுமார் பல இலட்சக்கணக்கான அப்பாவி ஆப்கானிஸ்தான் மக்கள் கொல்லப்பட்டனர். சுமார் இலட்சக்கணக்கானோர் கை கால்களை இழந்து முடமாகினர். ரஷ்யப் படை மற்றும் அமெரிக்க ஆதரவு முஜாஹிதீன் படை இருதரப்பிலும் பெருத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது.

இந்தநிலையில்தான், 1987இல் ஐ.நா தலையிட்டு ரஷ்யாவுக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவந்தது. இதன் விளைவாக, ரஷ்யா போர் நிறுத்தம் செய்வதாக அறிவித்தது. இதற்கிடையில், 1988ஆம் ஆண்டு ஒசாமா பின்லாடன், தனித்தனியாக பிரிந்து கிடந்த முஜாஹிதீன் உள்ளிட்ட இஸ்லாமிய ஆயுதம் தாங்கிய குழுக்களை, 'அல்கைடா' எனும் புதிய அமைப்பை உருவாக்கி ஒன்றிணைத்தார். 1989 ஆம் ஆண்டு ரஷ்யா தனது முழுப்படைகளையும் ஆப்கனிலிருந்து விலக்கிக்கொண்டது.

ரஷ்யப் படைகள் வெளியேறிய பிறகும், ஆப்கன் அரசுக்கும் முஜாஹிதீன்களுக்கும் இடையேயான போர் நின்றபாடில்லை. ஆப்கன் கம்யூனிச அதிபர் நஜிபுல்லா, புதிய தேசிய மறுமலர்ச்சி திட்டத்தைக் கொண்டுவந்து, புதிய அரசில் முஜாஹிதீன்களையும் பங்கெடுக்க அழைத்தார். அதை ஏற்க மறுத்த முஜாஹிதீன்கள், ஆப்கனை முழுமையான இஸ்லாமிய நாடாக மாற்றுவதே தங்கள் இலக்கு என்றார்கள். 1991ஆம் ஆண்டு சோவியத் யூனியனாக இருந்த ரஷ்யா உடைந்து, பல நாடுகளாகப் பிரிந்து பலவீனமடைந்தது. அதேவேளையில், 1992ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானின் பெரும்பகுதியைக் கைப்பற்றினார்கள் முஜாஹிதீன்கள். அதன் பின்னர், முஜாஹிதீன்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகளால், அதிலிருந்து புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. அமெரிக்கா– பாகிஸ்தான் இணைந்து உண்டாக்கிய மதரஸாக்களில் பயின்ற ஆயிரக்கணக்கான புதிய மாணவர்கள் அதில் இணைந்தனர். அவர்கள்தான் தற்போது உலகமே அஞ்சி நடுங்கும் தலிபான்கள்!

(தலிபான் என்றால் மாணவன் என்பதே பொருள். தலிப் (talib) என்ற அரபு வார்த்தையிலிருந்தே இது உருவாகிறது. அடிப்படையில் தலிபான் என்பது ஓர் இஸ்லாமிய மாணவர் அமைப்பே. ஆப்கன் – சோவியத் முரண் சூழலில் சோவியத்திற்கும், மார்க்ஸிய பின்னணி சார்ந்த ஆப்கான் அரசுக்கும் எதிராக




அமெரிக்கா உருவாக்கிய முஜாஹிதீன் அமைப்பினரின் வளர்ப்புக் குழந்தையே தலிபானியம்)

அமெரிக்காவின் பேராதரவுடன் முஜாஹிதீன் அமைப்பிலிருந்து கருவாகி, உருவானதுதான் ஒசாமா பின்லாடனின் ‘அல்கைடா’ அமைப்பும், முல்லா ஒமரின் ‘தலிபான்’ அமைப்பும் என்பதை இப்போது விளங்கிக்கொள்ளலாம்.

முல்லா ஒமரால் உருவாக்கப்பட்ட தலிபான் அமைப்பு, 1996 இல் முன்னாள் அதிபர் கம்யூனிச நஜிபுல்லாவைக் கொடூரமாகக் கொலை செய்து, இத்தாலியின் முசோலினியைப்போல ஆப்கன் மக்கள் முன்னிலையில் உடலைக் கம்பத்தில் தொங்கவிட்டது. அதே ஆண்டு, ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலையும் கைப்பற்றி, ஒட்டுமொத்த ஆப்கானிஸ்தானையும் முதன்முதலாக தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. கம்யூனிச ஆப்கானிஸ்தான் குடியரசை முழுவதுமாகத் துடைத்தெறிந்து, ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமீரகம் (Islamic Emirate of Afghanistan) என்ற இஸ்லாமிய நாடாக மாற்றியது.

இதுமட்டுமின்றி, இஸ்லாமிய மசூதிகள் தவிர்த்து, வேற்று மத அடையாளங்களும் சுக்கு நூறாக உடைக்கப்பட்டன. தொன்மையின் இலக்கணமாக, உலகப் புகழ்பெற்ற சின்னமாக விளங்கிய பாமியன் புத்தர் சிலை 2001 ஆம் ஆண்டு அவ்வாறே சிதைக்கப்பட்டது.

**வினை விதைத்தவன் வினை அறுப்பான்!**

பழைமைவாதிகளாக அறியப்பட்ட தலிபான்கள், பெண் குழந்தைகள் கல்வி கற்பதைத் தடுத்து நிறுத்தினர். பெண்கள் வேலைக்குச் செல்வதைத் தடுத்தனர் . பெண்கள் புர்கா அணிந்துகொள்வதும், ஆண்கள் தாடி வளர்ப்பதும் கட்டாயமாக்கப்பட்டன. ஆண் துணையில்லாமல் பெண்கள் வீட்டைவிட்டு வெளியில் வரக் கூடாது. ஆடல், பாடல், இசை, வெளியுலகத் தொடர்பு என ஆப்கன் மக்களின் மகிழ்ச்சிக்கான அனைத்துப் பொழுதுபோக்கு அம்சங்களுக்கும் தடைவிதித்தனர். அமெரிக்கா – பாகிஸ்தான் கூட்டில் ஏற்படுத்தப்பட்ட மதரஸாக்களில், பழைமைவாத இஸ்லாமிய மதகுருமார்களால் பயிற்றுவிக்கப்பட்ட, கடுமையான இஸ்லாம் ஷரியத் சட்டங்களை அமுல்படுத்தினர். சட்டத்துக்கு கட்டுப்படாதவர்கள், தவறுதலாகத் தவறிழைத்தவர்கள் என ஷரியத் சட்டத்தை மீறியவர்கள் யாராக இருந்தாலும், பொதுவெளியில் நிறுத்தி தலையைத் துண்டிப்பதையே தண்டனையாக்கினார்.

இத்தனை கொடுமைகள் அங்கு நடந்தும், அவற்றையெல்லாம் கண்டுகொள்ளாமல் திரும்பிக்கொண்டது அமெரிக்கா. அதில் தனக்கிருந்த பங்கை மறந்து பாராமுகமாக இருந்தது. ‘கம்யூனிச ஆட்சியும் வீழ்த்தப்பட்டது. தனக்குத் தலைவலியாக இருந்த ரஷ்யாவும் உடைந்து முற்றிலுமாகச் சிதைந்துவிட்டது. இனி ஆப்கானிஸ்தான் அரசியலில் நமக்கென்ன வேலை, தலிபான்கள் அங்கு என்ன செய்தாலும் தனக்குக் கவலையில்லை’ என்ற மனநிலையில் அலட்சியப் போக்குடன் இருந்தது அமெரிக்கா.

ஆனால், தான் விதைத்த வினை தன்னையே பலி கேட்கும் என்பதை அப்போது அமெரிக்கா எதிர்பார்த்திருக்கவில்லை. காத்திருந்தது அதிர்ச்சி வைத்தியம்.

2001, செப்டம்பர் 11 ஆம் நாள் உலகின் மிக உயரமான உலக வர்த்தக மையமான, அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம், அமெரிக்க விமானத்தைக் கொண்டே தகர்த்தெறியப்பட்டது. சுமார் 3,000 அமெரிக்க மக்களை உயிர்பலியாக்கி, உலகையே பரிதவிக்கவிட்ட இந்தச் சம்பவத்தைச் செய்தவர்கள், ஒசாமா பின்லாடனின் அல்கைடா அமைப்பினர். இதற்குக் களம் தந்து, உறுதுணையாக இருந்து ஆதரவு வழங்கியவர்கள் தலிபான்கள். (ஆனால் இந்தத்தாக்குதல் அமெரிக்க சி.ஐ.ஏ இற்குத் தெரியாமல் நடந்திருக்காது என, அமெரிக்கா மீதே சந்தேகம் கிளப்பி வாதிடுகின்ற ஒரு தரப்பினரும் உலகில் உள்ளனர்!)

**வளர்த்த கடா நெஞ்சில் பாய்ந்த காரணம் என்ன?**

ரஷ்யாவை, கம்யூனிசத்தை எதிர்ப்பதற்காக மட்டுமே அமெரிக்கா பிற நாடுகளை பயன்படுத்திக் கொள்வதில்லை. தனது நாட்டு நலன், இராணுவப் பாதுகாப்பு, பொருளாதாரத் தேவை, அரசியல் ஆதிக்கம் எனப் பல்வேறு காரணங்களாக அது நீள்கிறது. அப்படியான ஓர் அரசியல் விளையாட்டில், அமெரிக்காவின் கழுகுப் பார்வையில் சிக்கியதுதான் இஸ்லாமிய வளைகுடா நாடுகளில் இருக்கும் எண்ணெய் வளம். பெட்ரோலை டொலரில்தான் விற்க வேண்டும் என்பதில் தொடங்கி, வளைகுடா நாடுகளுக்கிடையே இருக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு பிரச்சனைகளிலும் அமெரிக்காவின் ஆதிக்கம் நிரம்பியது. இதன் விளைவாக, ஈரான், ஈராக், சிரியா, லிபியா போன்ற எண்ணெய் வளம்மிக்க வளைகுடா நாடுகளில் எப்போதும் அசாதாரணச் சூழல் நிலவியது. அவ்வப்போது போர் நிகழ்வதும், தலைவர்கள் கொல்லப்படுவதும், அரசுகள் கவிழ்க்கப்படுவதுமாக இருந்தது. (குறிப்பாக, ஈராக் சதாம் உசேனை தானே வளர்த்துவிட்டு, பின் தானே தூக்கிலிடவும் செய்தது அமெரிக்கா. இது போன்ற செயல்பாடுகள் அமெரிக்காவின் ‘எண்ணெய் அரசியல்’ என்று உலக அரசியல் நோக்கர்களால் இன்றளவும் விமர்சிக்கப்படுகின்றன)

இஸ்லாமிய வளைகுடா நாடுகளில் ஏற்படும் குழப்பத்துக்கும், இஸ்லாமிய நாடுகள் ஒன்றுக்கொன்று போர் செய்துகொண்டு, மக்கள் மாண்டு போவதற்கும் முக்கியக் காரணம் அமெரிக்காவின் தலையீடு எனக்

கருதினார் ஒசாமா பின்லாடன். குறிப்பாக, 1990இல் அமெரிக்கா முன்னெடுப்பில் ஈராக் மீது போடப்பட்ட பொருளாதாரத் தடையால், பெருமளவிலான ஈராக் மக்கள் வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தனர். உணவும் மருந்தும் இல்லாமல் குழந்தைகள் உயிரிழந்தனர். அதேபோல், பாலஸ்தீன இஸ்லாமியர்கள் மீது, இஸ்ரேலிய யூத அரசு மேற்கொள்ளும் போர் நடவடிக்கைகளைக் கண்டிக்காமல், தொடர்ந்து இஸ்ரேலை அமெரிக்கா ஆதரித்தது, ரஷ்ய – அமெரிக்கப் போரில் ஆப்கானிஸ்தானைக் களமாகப் பயன்படுத்திக்கொண்டது போன்றவையே, அமெரிக்கா மீதான தங்களின் எதிர்ப்புக்குக் காரணம் என அல்கைடா அமைப்பு திட்டவட்டமாக அறிவித்தது.

அமெரிக்காவை எதிர்க்கும் காரணம் குறித்து ஒசாமா பின்லேடன் சி.என்.என் ஊடகத்துக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

*"அமெரிக்கா எங்கள் நாடுகளை ஆக்கிரமிக்க நினைக்கிறது. எங்கள் வளங்களைக் கொள்ளையடிக்க நினைக்கிறது. அதன் ஏஜென்ட்டுகள்தான் நம்மை ஆள வேண்டும் என்று திட்டமிடுகிறது. இத்தனைக்கும் எங்களைச் சம்மதிக்க வைக்கப் பார்க்கிறது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்தால், எங்களைத் தீவிரவாதிகள் என்கிறது. பாலஸ்தீனிய குழந்தைகள் இஸ்ரேல் குடியிருப்புப் பகுதியில் கல் எறிந்தால் அவர்களைத் தீவிரவாதிகள் என்று சொல்லும் அமெரிக்கா, லெபனான் நாட்டின் ஐ.நா கட்டடத்தில் குழந்தைகளும் பெண்களும் இருக்கும்போது, இஸ்ரேல் அதை குண்டுவைத்து தகர்க்கும்போது மட்டும் அதற்கு கண்டனம் தெரிவிக்கவில்லை. அதே சமயம் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் எல்லா இஸ்லாமியர்களுக்கும் கண்டனம் தெரிவிக்கிறது. எங்கு பார்த்தாலும் அமெரிக்காதான் தீவிரவாதம் மற்றும் உலக குற்றங்களின் தலைவனாக இருக்கிறது!"*

**தனக்கு வரும் வரை எல்லாமே வேடிக்கைதான்!**

உலக அரங்கில் அமெரிக்காவுக்கு பெரும் தலைகுனிவாகவும், பாதுகாப்பு அச்சுறுத்தலாகவும் விளங்கிய இந்தச் சம்பவத்தால் (2001, செப்டம்பர் 11 தாக்குதல்), தலிபான்களுக்கெதிராகக் கொதித்தெழுந்தது அமெரிக்கா. பெரும்பாலும், அமெரிக்கா தனது இராணுவத்தின் உயிர்ச்சேதத்தை தவிர்க்கும் பொருட்டு தரைப்படையைப் பிற நாட்டுப் போர்களில் ஈடுபடுத்த விரும்பாது. ஆகவேதான் பனிப்போரிலும் கூட தான் பகடையாகப் பயன்படுத்திக் கொள்ளும் நாடுகளின் படைவீரர்களையே தரைப்படையாக அமெரிக்கா பயன்படுத்தியது. அதிகபட்சமாக, தன் விமானங்கள் மூலம் தொலைவிலிருந்து குண்டுமழை பொழிவதை வழக்கமாகக் கொள்ளும். ஆனால், இம்முறை அதோடு மட்டும் நிற்கவில்லை. நேரடியாக இராணுவ வீரர்களை ஆப்கானிஸ்தான் களத்தில் இறக்கியது. காரணம், எதிரி தொட்டது அமெரிக்க ஆதரவு படைகளை அல்ல... நேரடியாக அமெரிக்க மண்ணில் வைத்து அமெரிக்காவையே சீண்டியது. எனவே, 'எந்த விலை கொடுத்தும் தன்மீது கைவைத்த அல்கைடா, தலிபான்களை பழிதீர்க்காமல் விட மாட்டோம்' என்று சூளுரைத்து ஆப்கானிஸ்தான் மண்ணில் கால் பதித்தது.

அமெரிக்காவின் தீவிர தாக்குதலை தாக்குப்பிடிக்க முடியாமல் தத்தளித்தது தலிபான். அல்கைடா தலைவர் ஒசாமா பின்லாடனும், தலிபான் தலைவர் முல்லா ஒமரும் எல்லை கடந்து பாகிஸ்தானுக்குத் தப்பி ஓடினர். சில மாதங்களிலேயே, ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சி தூக்கி வீசப்பட்டது.

ஆப்கானிஸ்தான் இராணுவத்துக்குப் பயிற்சியளித்தபடியே, அமெரிக்க இராணுவம் மற்றும் அதன் கூட்டு நாடுகளின் நேட்டோ படையினரும் ஒசாமா பின்லாடனைத் தேடும் வேட்டையில் இறங்கினர். பிடிகொடுக்காத தலிபான்களும், அல்கைடாவினரும் தொடர்ந்து எதிர்த் தாக்குதல் நடத்திவந்தனர். இந்தநிலையில், 2009 ஆம் ஆண்டு அமெரிக்காவின் புதிய அதிபரான ஒபாமா, ஒசாமா பின்லாடனைப் பிடிப்பதற்கான தாக்குதலைத் தீவிரப்படுத்தினார். எங்கும் இல்லாத அளவுக்கு சுமார் 1,50,000 வீரர்களை ஆப்கனில் இறக்கியது அமெரிக்கா. விளைவு, பத்தாண்டு தேடுதலுக்குப் பிறகு, 2011, மே 2 ஆம் நாள் பாகிஸ்தானில் பதுங்கியிருந்த ஒசாமா பின்லாடனைச் சுட்டுக் கொன்றது அமெரிக்கா.

அந்த நிகழ்வு, அமெரிக்காவைப் பகைத்தால் என்ன கதியாகும் என்பதை உலகுக்கு இன்னும் ஆழமாக உணர்த்தியது. அதன் பின்னர், 2013 ஆம் ஆண்டு தலிபான் தலைவர் முல்லா ஒமரும் உடல்நலக்குறைவால் உயிரிழந்த தகவல், இரு ஆண்டுகள் கழித்து 2015இல் வெளியானதும் அமெரிக்கா மகிழ்ந்தது. இதையடுத்து, தலிபான்களின் புதிய தலைவராகப் பொறுப்பேற்ற அக்தர் மன்சூரை, 2016 ஆம் ஆண்டு வான்வழி ட்ரோன் தாக்குதல் மூலம் கொன்றது அமெரிக்கா.

வந்த வேலை முடிந்துவிட்டது என மனச் சமாதானம் அடைந்தது. படிப்படியாக, நேட்டோ படையினரும் ஆப்கானிஸ்தானிலிருந்த தங்கள் கூடாரத்தை காலி செய்துவிட்டுக் கிளம்பினர். அமெரிக்காவும் கிட்டத்தட்ட அதே மனநிலையில்தான் இருந்தது. அதேவேளையில் தலிபான்களின் தலைதூக்கல் வேகமெடுத்தது, அமெரிக்கப் படையினரின் முகாம்கள் குறிவைத்து தாக்கப்பட்டன.

அமெரிக்கா, தலிபான்களுடனான போரில் மட்டும் சுமார் 2 டிரில்யன் (trillion) டொலர் செலவு செய்ததாகக் கணக்கு காட்டப்பட்டது. 2001 முதல் சுமார் 3,500 அமெரிக்க இராணுவத்தினர் ஆப்கன் மண்ணில் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், ஆப்கன் இராணுவத்தினர் சுமார் 69,000 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

இந்தநிலையில்தான், கடந்த 2020 ஆம் ஆண்டு மத்திய கிழக்கு நாடான கத்தாரின் தலைநகர் டோஹாவில் தலிபான்களை வரவழைத்து, அமெரிக்கா அவர்களுடன் அமைதி உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டது. அதில், அல்கைடாவுக்கு மீண்டும் ஆப்கானிஸ்தான் மண்ணில் தலிபான்கள் இடமளிக்கக் கூடாது, அமெரிக்க இராணுவத்தினர் மீதான தாக்குதலைக் கைவிட வேண்டும், இவற்றைச் செய்தால் சரியாக 14 மாதங்களுக்குள் ஆப்கானிஸ்தான் மண்ணைவிட்டு வெளியேறுவதாக அமெரிக்கா அந்த ஒப்பந்தத்தின் மூலம் கேட்டுக்கொண்டது. இதை ஏற்றுக்கொண்ட தலிபான்கள், அமெரிக்க இராணுவத்தினர் மீதான தாக்குதலை நிறுத்திக்கொண்டனர். மாறாக, ஆப்கானிஸ்தானிலிருக்கும் சமூகச் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், நீதிபதிகள், பத்திரிகையாளர்கள், அதிகாரத்திலிருக்கும் பெண்கள் எனத் தனிமனிதர்களைக் குறிவைத்த தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தினர்.

**அமெரிக்காவின் வெற்றிகரமான தோல்வி!**

இதற்கிடையில், 2021இல் அமெரிக்காவின் புதிய அதிபராக பொறுப்பேற்ற ஜோ பைடன், கடந்த ஏப்ரல் மாதம், 'அமெரிக்கா செப்டம்பர் 11 இற்குள் முற்றிலுமாகத் தனது படையினரைத் திருப்பப் பெற்றுக்கொள்ளும்' என அதிரடியாக அறிவித்தார். அமெரிக்காவின் அறிவிப்பு வெளியானதுதான் தாமதம், உடனே தலிபான்கள் தங்களின் ஒட்டுமொத்த படைபலத்தையும் களமிறக்கி, ஆப்கன் அரச இராணுவத்துக்கெதிராக தீவிர தாக்குதலை நடத்தினர். அதுவே இறுதிப்போராக உருவெடுத்தது. அதேவேளையில், ஆப்கன்

அரசைக் கைகழுவிவிட்டு, 90% அமெரிக்கப் படைகளை திரும்பப் பெற்றுக்கொண்டது அமெரிக்கா.

தலிபான்களின் கொடூரமான தாக்குதலில், ஆப்கன் அரச இராணுவத்தினர் திசை தெரியாமல் சிதறடிக்கப்பட்டனர். அதுநாள் வரை கேடயமாக இருந்த அமெரிக்க இராணுவம் வெளியேறிய பின்னர், தனித்துவிடப்பட்ட ஆப்கன் அரசு கையறுநிலைக்குத் தள்ளப்பட்டது. தலிபான்கள் தாக்குதலில் ஆப்கன் இராணுவத்தினர் பலர் சண்டையிட்டு உயிரிழந்தனர், பலர் மண்டியிட்டு சரணடைந்தனர். இதற்குமேல் தாமதித்தால், அன்று நஜிபுல்லாவுக்கு ஏற்பட்ட நிலைதான் இன்று தனக்கும் ஏற்படும் என்ற கருதிய ஆப்கன் அதிபர் அஷ்ரஃப் கானி நாட்டைவிட்டே தப்பியோடினார். ஆப்கன் தலைநகர் எதிர்ப்பின்றி தலிபான் வசம் வந்தது. சுமார், 20 ஆண்டுகளுக்குப் பிறகு, முழு ஆப்கானிஸ்தானையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கின்றனர் தலிபான்கள்.

அதன் பின்னர், ஆப்கன் மக்கள் அண்டை நாடுகளுக்கு அகதிகளாக தப்பியோடியதும், விமானத்தின் இறக்கைகளில் பறந்து கீழே விழுந்து மாண்டதும், உயிர்பயத்தில் கண்ணீர்விட்டுக் கதறும் காட்சிகளும் சமூக வலைதளங்களில் பரவிவருகின்றன. பல்வேறு நாடுகள் தமது தூதரகங்களைக் காலிசெய்துவிட்டு ஓட்டமெடுத்தன. இத்தனைக்கும் காரணம் தலிபான்கள்! தலிபான்கள் ஆப்கனைக் கைப்பற்றிவிட்டார்கள் என்பதுதான். இப்படியொரு பழைமைவாதிகளிடம் சிக்கிக்கொண்டு ஆப்கன் மக்கள் எப்படி வாழப்போகிறார்கள், அவர்களின் எதிர்காலம் என்னவாகும் என உலக மக்கள் வேதனைப்படுகிறார்கள். ஆனால், அத்தனை கொடுமை வாய்ந்த பழைமைவாதிகளை ஊட்டி வளர்த்தவர்கள் யார் என்ற கேள்வி அனைவருக்குள்ளும் புதைந்து கிடக்கிறது.

**ஆப்கன் மக்களை அமெரிக்கா கைவிட்டதற்குக் காரணம் இயலாமையா, இலாப அரசியலா?**

போர் என்று சொல்லி, ஆப்கானிஸ்தானில் கால்வைத்த ரஷ்யா, பிரிட்டன் போன்ற எல்லா நாடுகளும் அவமானத்துடன்தான் வெளியேறியிருக்கின்றன. அதுதான் வரலாறு. அமெரிக்கா சற்று முந்திக்கொண்டது. தோல்வியைச் சமாதானமாக்கிக் கொண்டது. 20 ஆண்டுகள் முழுமையாக நிலைகொண்டும், தலிபான்களையும், அல்கைடாவையும் அதனால் அடியோடு அழிக்க முடியவில்லை. இனியும் இராணுவ உயிர்ச்சேதம், பெரும் பொருள்




சேதங்களையெல்லாம் தாக்குப்பிடிக்கும் சக்தியில்லை. தான் இன்னமும் கால்பதித்திருக்கும் மற்ற வளைகுடா நாடுகளைப்போல, ஆப்கானிஸ்தானில் எடுப்பதற்கு எண்ணெய் வளமெல்லாம் இல்லை. அரபிக்கடலில் ஆதிக்கம் செலுத்த ஆப்கனில் கடற்கரையும் இல்லை. அங்கு விவசாயம்தான் பிரதான தொழில்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை, ஆப்கன் மத்திய கிழக்கு பகுதியிலுள்ள ஓர் இடம் மட்டுமே. அமெரிக்காவிடம் சவூதி அரேபியா, அரபு அமீரகம், ஈராக் என எண்ணெய்வளமும், பூலோக முக்கியத்துவமும் வாய்ந்த பல வளைகுநாடுகள் கைவசம் இருக்கின்றன. இனி ஆப்கனில் இருப்பதில் எந்த இலாபமும் இல்லை, மாறாக இழப்புதான் மிஞ்சும்! தலிபான்களிடம் போரிட்டு வெற்றி கொள்வது இப்போது சாத்தியமல்ல, சமாதானம் செய்து பின்வாங்குவதுதான் சாதுரியம் என்பதை அமெரிக்கா புரிந்துகொண்டது. ஆக, ஆப்கன் மக்களை அமெரிக்கா கைவிட்டதற்குக் காரணத்தில் இயலாமை, இலாப அரசியல் இரண்டுமே இருக்கின்றன என்பதுதான் இதன் மூலம் வெளிப்படுகின்றது.

(மேலும், ஆப்கானிஸ்தானில் இப்போது ரஷ்ய ஆதிக்கம் இல்லை, அமெரிக்கா எதிர் ரஷ்யா என்ற போட்டி இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலே முடிந்துவிட்டது. இருபத்தோராம் நூற்றாண்டான இன்று அமெரிக்கா எதிர் சீனாதான்! இப்போது தலிபான் ஆட்சியை முதல் ஆளாக ஆதரித்து, தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கி வைத்திருக்கிறது சீனா. இனி அமெரிக்கா அமைதி காக்குமா, மீண்டும் 'என்ட்ரி' (Entry) கொடுக்குமா என்பதைக் காலம் தான் தீர்மானிக்கும்)

இந்தநிலையில்தான், அமெரிக்கா ஆப்கன் மக்களுக்கு துரோகமிழைத்து விட்டது எனக் கூறுபவர்களுக்கு, பதிலடி தரும் விதமாகப் பேசியிருக்கிறார் அமெரிக்க அதிபர் ஜோ பைடன். பழைய வரலாற்றை மூடிமறைக்கும்படி, ''இன்னும் எத்தனை தலைமுறை அமெரிக்கப் பிள்ளைகளை ஆப்கன் உள்நாட்டுப் போருக்கு நாங்கள் அனுப்ப வேண்டும்?'' என்று ஆதங்கப்படுகிறார்.

இத்தனை ஆண்டுக்காலம் தலிபான்களிடம் சிக்கிக்கொண்டிருந்த, ஆப்கன் மக்களை அமெரிக்கா மீட்டதாகவும், 'ஆப்கன் ஆட்சியாளர்களின் கையாலாகாத்தனத்தால் அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை, இராணுவ வீரர்கள் எதிர்த்து சண்டையிடவில்லை, ஆப்கன் அதிபர் கோழைத்தனமாக தப்பியோடிவிட்டார்' என விமர்சன வார்த்தைகளை அள்ளி வீசியிருக்கிறார் ஜோ பைடன்.

ஆனால் இவை எல்லாவற்றுக்கும் மூல காரணம், காரணகர்த்தா யார் என்ற உண்மை, உரக்கக் கத்துவதால் மட்டும் மூடி மறைந்து போய் விடாது. தலிபான்கள் பிடித்திருக்கும் ஆயுதங்களில் எவரது கைரேகைகள் பதிந்திருக்கின்றன என்பதை வரலாறு என்றென்றைக்கும் வட்டமிட்டுக் காட்டிக்கொண்டுதான் இருக்கும்!

**தலிபான்கள் என்ன சொல்கிறார்கள்...**

தலிபான்கள், ''இஸ்லாமிய ஷரியத் சட்டத்தின்படியே கட்டுப்பாடுகள் இருக்கும். ஆனால், இருபதாண்டுகளுக்கு முன்பு இருந்ததுபோல் இப்போது நாங்கள் இல்லை. கல்வி கற்கவும், வேலைக்குச் செல்லவும் பெண்களை அனுமதிப்போம். ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படும். அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கிவிட்டோம். அரசு ஊழியர்கள் இனி வழக்கம்போல் பணிக்குத் திரும்பலாம். எங்கள் மண்ணிலிருந்து இனி எந்த நாட்டுக்கும் ஆபத்து ஏற்படாது. அமைதியாக ஆட்சி செய்ய விரும்புகிறோம். உலக சமுதாயம் எங்களை நம்ப வேண்டும்!'' எனச் செய்தியாளர் சந்திப்பில் உறுதியளித்துள்ளனர்.

**உலகம் என்ன சொல்கிறது..?**

ஆனால், பழைமைவாதம் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளும் என்பது சந்தேகம்தான். இதே மனநிலையில்தான் இன்று ஒட்டுமொத்த உலக சமுதாயமும் ஆப்கானிஸ்தானை பதற்றத்தோடு உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றது!

(இக்கட்டுரை விகடன் இதழில் வெளியானது)

# இலங்கை தமிழ் அரங்கியல் வரலாற்றில் முத்திரை பதித்த மாத்தளை கார்த்திகேசு

பிரபல எழுத்தாளரும், திரைப்படத் தயாரிப்பாளருமான மாத்தளை கார்த்திகேசு (கருப்பையாப்பிள்ளை கார்த்திகேசு) மறைந்த செய்தி இலங்கையின் இலக்கிய உலகுக்கு பெரும் இழப்பாகும். மாத்தளையில் உள்ள அவரது இல்லத்தில் ஓகஸ்ட் 6 ஆம் திகதி உடல்நலக்குறைவு காரணமாக அவர் உயிரிழந்தார்.

'மலையகத்தின் வடக்கு வாசல்' என்னும் வரலாற்றுப் பெருமை கொண்ட மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கருப்பையாப்பிள்ளை கார்த்திகேசு. பிறந்த மண்ணைத் தன் பெயருடன் இணைத்துக் கொண்டதால் மாத்தளை கார்த்திகேசுவானவர்.

மாத்தளை விஜய கல்லூரியிலும், கிறிஸ்தவக் கல்லூரியிலும் கல்வி பயின்றவர். 1950களில் கிறிஸ்தவக் கல்லூரியின் மாணவனாக இருந்த நாட்களிலேயே, கல்லூரியின் உபஅதிபராக இருந்த செல்லத்துரை அவர்கள் மேடையேற்றிய 'நலமே புரியின், நலமே விளையும்' எனும் நாடகத்திலும், மாத்தளை புனித தோமையார் கல்லூரி ஆசிரியர் ராஜரட்ணம் அவர்களின் 'அன்பின் வெற்றி' நாடகத்திலும், அவருடைய அடுத்த மேடை நாடகமான 'இதுதான் முடிவு' நாடகத்திலும் நடிக்கக் கிடைத்த வாய்ப்பின் மூலம் நாடகத்துறைக்குள் உள்வாங்கப்பட்டவர் மாத்தளை கார்த்திகேசு.

பாடசாலை மட்ட நாடகப் போட்டிக்கு நாடகம் தயாரித்து மேடையேற்றி பரிசு வாங்கும் பக்குவமும் இவருக்கு கல்லூரி நாட்களிலேயே கிடைத்திருக்கிறது. நடிப்பிற்கான பாராட்டுதல்களும் (அன்பின் வெற்றி), மேடைத் தயாரிப்புக்கான பரிசும் (பணமா பாசமா) கொழும்புக்கான தொழில் நகர்வின் பின்னரும், இவரை நாடகத்துறையில் இருந்து விலகிவிட மறுத்தன.

கவின் கலை மன்றம் 1956 இல் கொழும்பு- 3 கொள்ளுப்பிட்டியில் அமரர் ஜே.பி. றொபட் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அமரர்களான ஜோன் சாமிதாசன், எஸ்.ஏ.செல்லையா, எம்.டி.மோசஸ் ஆகிய கலைஞர்கள் ஒன்றிணைந்து செயற்பட்ட அரங்கியல் விருத்திக்கான அமைப்பு இது. கொழும்பு வந்த நாடகப்பிரியரான மாத்தளை




கார்த்திகேசு கவின் கலை மன்றத்தில இணைந்தார்.

அமரர் ஜே.பி.ரொபட்டும் மாத்தளை கார்த்திகேசுவும் இணைபிரியா இரட்டையர்களாக கொழும்பின் நாடக உலகில் உலா வந்தவர்கள். கவின் கலை மன்றத் தயாரிப்பான 'பலே புரடியூசர்', 'வெண்ணிலா' போன்ற நாடகங்களில் நடிக்க வைத்து கொழும்பு வாழ் நாடக ரசிகர்களுக்கு இவரை அறிமுகப்படுத்திய பெருமை அமரர் ஜே.பி.ரொபட்டை சாரும்.

1960 ஆம் ஆண்டின் தேசிய கலைவிழா ஹட்டனில் நடந்த போது கவிஞர் நவாலியூர் சொக்கநாதன் எழுதித் தயாரித்து மேடையேற்றிய 'சிங்ககிரிச்செல்வி' என்னும் கவிதை நாடகம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. ஹட்டன், மாத்தளை அரங்குகளில் மேடையேறிய இக்கவிதை நாடகத்தை கொழும்பிலும் பல தடவை மேடை ஏற்றியவர் மாத்தளை கார்த்திகேசு.

**தெளிவத்தை ஜோசப்**

1971.ல் இவர் எழுதிய 'தீர்ப்பு' என்னும் நாடகம் அந்தனி ஜீவாவின் இயக்கத்தில் பிரபல அரங்கியல் நெறியாளர் சுஹைர் ஹமீட் அவர்களால் மேடையேற்றப்பட்டது. 25 இற்கும் மேற்பட்ட நாடகங்களை இவர் எழுதித் தயாரித்துள்ளார்.

இவருடைய நாடகப் பிரதிகள் கொழும்பு பல்கலைக்கழகம், மொரட்டுவை பல்கலைக்கழகம், கொழும்பு ரோயல் கல்லூரி, சென்.ஜோசப் கல்லூரி, வெஸ்லி கல்லூரி, புனித அன்னம்மாள் பாடசாலை போன்ற பிரபல கல்லூரிகளின் தமிழ் விழாக்களில் மாணவர்களால் தயாரித்து மேடையேற்றப்பட்டுள்ளன. ஒரு சில நாடகங்கள் இவருடைய மேற்பார்வையுடனும் அரங்கேறியுள்ளன.

இவருக்கு புகழையும், அரங்கியல் பிரபலத்தையும் பெற்றுக்கொடுத்த நாடகம் 'காலங்கள் அழுவதில்லை'.

1972 இல் ஜே.பி.ரொபட்டின் நெறியாள்கையுடன் கவின் கலை மன்றம் மேடையேற்றிய நாடகம் மாத்தளை கார்த்திகேசுவின் 'காலங்கள் அழுவதில்லை'. மலரன்பனின் சிறுகதையான 'உறவுகளை' தழுவி எழுதப்பட்ட இந்த நாடகமே, மலையக மக்களின் உண்மையான வாழ்வை மிகவும் யதார்த்தபூர்வமாக கொழும்பு மேடைகளில் காட்டிய முதல் நாடகமாகும்.

அச்சு ஊடகங்களும் இலங்கை வானொலி போன்ற மின் ஊடகங்களும் இந்த நாடகம் பற்றிப் பேசின, எழுதின. கைலாசபதி, சிவத்தம்பி, மௌனகுரு போன்ற பேராசியர்களும் கே.எஸ்.சிவகுமாரன் போன்ற திறனாய்வாளர்களும் இந்த நாடகம் பற்றிப் பேசினர்.

இலங்கை கலாசாரப் பேரவையின் தமிழ் நாடகக் குழு 1972 ஆம் ஆண்டின் சிறந்த நாடகத்துக்கான கௌரவத்தினை மாத்தளை கார்த்திகேசுவின் 'காலங்கள் அழுவதில்லை' நாடகத்துக்கு வழங்கியது.

இலங்கை மத்திய வங்கி 1974 இல் ஒரு நாடக விழா நடத்தியது. அந்த விழாவில் 'காலங்கள் அழுவதில்லை'நாடகத்துக்கு சிறந்த நாடகப் பிரதி, சிறந்த நாடகம், சிறந்த நடிப்பு ஆகிய மூன்ற பரிசுகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் வணக்கத்துக்குரிய தனிநாயகம் அடிகளார் முன்னிலையில் இரண்டு அரங்குகளில் மேடையேற்றப்பட்டு பெருமை கொண்ட நாடகம் இது.

இவருடைய நாடகங்கள் தேசிய விழாக்களில் தொடர்ச்சியாகப் பரிசுகளைப் பெற்றுக் கொண்டன. 1972 – காலங்கள் அழுவதில்லை, 1973 – (நாடக விழா நடைபெறவில்லை), 1974 – களங்கம், 1975 – போராட்டம், 1976 – ஒரு சக்கரம் சுழல்கிறது

மேடை நாடகத்துறையில் இருந்து தொலைக்காட்சிக்கும் அதைத் தொடர்ந்து

திரைப்படத்துறைக்கும் காலடி வைத்து சுவடு பதித்தவர் இவர். 'குடும்பம் ஒரு கலைக்கதம்பம்' (ஒரு அங்கம்), 'காலங்கள்' (ஏழு அங்கங்கள்) ஆகியவை இலங்கை ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்ட இவரது தொலைக்காட்சி நாடகங்களாகும்.

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் நடத்திய திரைக்கதை வசனம் எழுதும் போட்டியில் பி.விக்னேஸ்வரன் அவர்களுக்கு முதல் பரிசும், மாத்தளை கார்த்திகேசு அவர்களுக்கு இரண்டாம் பரிசும் கிடைத்தன.

'சுட்டும் சுடர்' என்பது மாத்தளை கார்த்திகேசுவின் பரிசு பெற்ற திரைப்பிரதி. மாத்தளை கார்த்திகேசு அவர்களின் திரைக்கதை, வசனம், தயாரிப்பில் உருவான தமிழ்த் திரைப்படம் 'அவள் ஒரு ஜீவநதி'. படத்தின் இயக்குனர் ஜே.பி.ரொபட் அவர்கள்.

டீன் குமார், விஜயராஜா, செந்தூரன், மாத்தளை கார்த்திகேசு, ஏகாம்பரம், சிதம்பரம், பரினாலை, அனுஸ்கா போன்றவர்களுடன் கே.எஸ். பாலசந்திரனும் நடித்துள்ளார். கே.எஸ். பாலச்சந்திரனுக்கு சினிமாவில் பெயர் கொடுத்த திரைப்படம் 'வாடைக்காற்று'.

எண்பதுகளில் திரைக்கு வந்த 'அவள் ஒரு ஜீவநதி' திரைப்படம் மாத்தளை கார்த்திகேசு அவர்களுக்கு நிறையவே அனுபவங்களை மட்டும் கொடுத்துச் சென்றது.

நாடகத்தை ஒரு ஊடகமாகப் பயன்படுத்திக் கொண்ட கார்த்திகேசு, அரங்கியல் செயற்பாடுகளுக்கு அப்பாலும் இலக்கியத் துறை ஈடுபாட்டாளராகவும், செயற்பாட்டாளராகவும் திகழ்ந்துள்ளார்.

மாத்தளையில் மாணவர் மன்றம், இளைஞர் மன்றம், வள்ளுவர் மன்றம் என்று அமைத்துச் செயற்பட்டவர். மாத்தளை சைவ மகாசபையின் முக்கியஸ்தர்களில் ஒருவர். மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் பொருளாளராகப் பணியாற்றியவர். மறையும் வரை மன்றத்தின் காப்பாளர்களுள் ஒருவர். தமிழ் கதைஞர் வட்டத்தின் (தகவம்) தலைவராகப் பணி புரிந்து, அதனைச் சிறப்பாக நடத்தியவர்.

'வழிபிறந்தது' என்ற ஒரு மலையக நாவல் எழுதி வெளியிட்டிருக்கிறார் (1992), சிறுகதை, இலக்கிய கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

இவை அனைத்துக்கும் மேலாக ஒரு அரங்கியல் கலைஞர் என்பதற்கு அடுத்ததாக தன்னுடைய 'குறிஞ்சி' பதிப்பகம் மூலமாக 16 இலக்கிய நூல்களை வெளியிட்டிருக்கின்றார் என்பது முக்கியமானது.

கலாபூஷணம் உள்ளிட்ட தேசிய உயர் விருதுகளையும் பெற்றுள்ள மாத்தளை கார்த்திகேசு அவர்கள், ஈழத்து அரங்கியல் துறையின் மிக முக்கியமான ஒருவராகத் திகழ்ந்தவர்.

ஈழத்துத் தமிழ் அரங்கியல் வரலாறு மாத்தளை கார்த்திகேசுவை ஒதுக்கி விட்டு எழுதப்பட முடியாததது என்பது அவருடைய அரங்கியல் ஆளுமையை உறுதிப்படுத்துகின்றது.

# ஆப்கானின் தற்போதைய நிலைக்கு அமெரிக்காவே பொறுப்பு: சீனா

ஆப்கானிஸ்தானில் தற்போது நிலவும் நிச்சயமற்ற நிலைமைக்கு அமெரிக்காவே பொறுப்பு என்று ஆப்கானிஸ்தானிய விவகாரங்களுக்கான சீன விஷேட தூதுவர் யு ஸியாயோங் (Yue Xiao yong) தெரிவித்துள்ளார்.

ஜியோ செய்தி (Geo News) நிறுவனத்துக்கு அவர் வழங்கிய செவ்வியில், 'நாட்டில் அரசியல் தீர்வுக்கு எந்த உதவியும் செய்யாமல் அமெரிக்கா ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறிவிட்டது' என்றார்.

படையைப் பயன்படுத்துவது, இராணுவ நடவடிக்கை, மற்றும் மற்ற நாடுகளின் விவகாரங்களில் தலையிடுதல் என்பன நிலைமையை மிக மோசமாக்கும் என்பதை அமெரிக்கா உணரவேண்டும் என்றும் அவர் கூறினார். ஆப்கானிஸ்தானில் பெற்றுக்கொண்ட அனுபவத்திலிருந்து அமெரிக்கா இந்த பாடத்தைக் கற்றுக்கொள்ளும் என்று நம்புவதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா வெளியேறிய முறையானது பொறுப்பற்றது என்றும் அவர் கூறினார்.

விஷேட தூதுவர் மேலும் கூறுகையில்,



தலிபான்கள் எல்லா இன குழுக்களையும் ஐக்கியப்படுத்தி எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் ஓர் அரசாங்கத்தை நிறுவுவார்கள் என்று சீனா நம்புவதாகவும் அவர் சொன்னார்.

ஆப்கானிஸ்தான் பயங்கரவாதத்தின் பாதுகாப்புக்கு சொர்க்கமாக இருக்கக்கூடாது. பயங்கரவாத குழுக்களிடமிருந்து அது ஒரு தெளிவான இடைவெளியை ஏற்படுத்தவேண்டும். அண்டைய நாடுகளுடன் நட்புறவுடன் இருக்கவேண்டும்.

அண்டை நாடுகள், பிராந்தியம் மற்றும் பரந்த அளவிலான சர்வதேச சமூகத்துக்கு அச்சுறுத்தலாக இருக்கக் கூடாது என்றும் அமைதியை பராமரிக்கும் தமது வாக்குறுதியை தலிபான்கள் காப்பாற்றுவார்கள் என்று நம்புவதாகவும் விஷேட தூதுவர் கூறினார்.

அல்கைடாவுடன் தொடர்புடையது என்று நம்பப்படும் கிழக்கு துருக்கிஸ்தான் இஸ்லாமிய அமைப்புக்கு (Eastern Turkistan Islamic Movement - ETIM) அடைக்கலம் கொடுத்தது போன்ற தவறை தலிபான்கள் மீண்டும் செய்யமாட்டார்கள என்று தமது நாடு நம்புவதாவும் அவர் கருத்து வெளியிட்டார்.

இதேவேளையில் ஆப்கானிஸ்தானில் முதலீடு செய்யவும், தமது நாட்டில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும் தலிபான், சீனாவுக்கு அழைப்பு விடுத்துள்ளது. ஆப்கானிஸ்தான் அரசியல் வரலாற்றில் இது ஒரு முக்கியமான மாற்றமாக கருதப்படுகிறது. ஒருபோதுமே ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகளுக்கும் தலிபான்களுக்கும் இடையே நல்ல உறவு இருந்ததில்லை. இந்தச் சூழ்நிலையை பயன்படுத்தி தலிபான்கள், சீனாவுக்கு நெருக்கமாக செல்ல முடிவு செய்திருக்கலாம்.

# புவி வெப்பமடையும் வேகம் அதிகரிப்பு: உலக நாடுகளுக்கு ஐ.நா. எச்சரிக்கை



'புவி வெப்பமடையும் வேகம் எதிர்பார்த்ததை விட மிக வேகமாக அதிகரித்து வருகின்றது. வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் சராசரி வெப்பநிலை 1.5 பாகை செல்சியஸ் ($1.5^0$ Celsius) அதிகரிக்கும் என்பது தவிர்க்க முடியாதது. கடும் வெயில், மழை வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களை தவிர்க்க முடியாது' என, ஐ.நா. நிபுணர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

பருவ நிலை மாறுபாடு என்பது உலகளாவிய பிரச்சனை. இதை எதிர்கொள்வதற்காக, 2015இல் பாரிசில் நடந்த மாநாட்டில் இந்தியா, அமெரிக்கா உட்பட 196 நாடுகள் கையெழுத்திட்டன. அதன்படிக்கு, 2030க்குள் வெப்பநிலை உயர்வை 1.5 பாகை செல்சியஸாகக் குறைப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதற்கு, காற்றில் அதிக அளவு காபனீர் ஒக்சைட் ($CO_2$)வெளியிடுவதை தடுக்க வேண்டும்.

அமெரிக்காவும் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த நிலையில், இந்த ஒப்பந்தம், தங்கள் நாட்டின் வளர்ச்சியையும் வேலைவாய்ப்பையும் பாதிக்கின்றது என்று கூறி, காபனீர் ஒக்சைட் அதிக அளவில் வெளியேற்றும் நாடுகளில் இரண்டாவது இடத்திலுள்ள அமெரிக்கா கடந்த வருடம் வெளியேறுவதாக அறிவித்தது.

இந்நிலையில் ஐ.நாவில் அங்கம் வகிக்கும் நாடுகளைச் சேர்ந்த சுற்றுச்சூழல் நிபுணர்கள், விஞ்ஞானிகள் இணைந்து, ஐ.பி.சி.சி (IPCC) எனப்படும் நாடுகளுக்கு இடையேயான பருவ நிலை மாறுபாடு குழுவின் (The Intergovernmental Panel on Climate Change) ஆறாவது அறிக்கையை ஓகஸ்ட் 10ந் திகதி வெளியிட்டனர்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

- புவி வெப்பமடைதல் பிரச்னை அனைத்து பிராந்தியங்கள், மண்டலங்கள் என பூமியின் அனைத்து பகுதியிலும் உள்ளது. சுற்றுச்சூழல் மாசு உட்பட அனைத்து வகையிலும் மனிதர்கள் ஏற்படுத்தியுள்ள சீர்கேடை சரி செய்வதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுத்தால்கூட ஆயிரம் ஆண்டுகள் போதாது

- இயற்கையை தொடர்ந்து சீரழித்து வருவதால் ஏற்பட்டுள்ள தாக்கத்தை, பிரச்னைகளை உலக நாடுகள் தற்போது சந்தித்து வருகின்றன. சராசரி வெப்பநிலை உயர்வு, ஆட்டிக் (arctic) பகுதியில் பனிப் பாறைகள் உருகுவது, கடும் பஞ்சம், அதிக அளவில் மழை அல்லது வறட்சி என அதன் பாதிப்புகளை சந்தித்து வருகிறோம்

- பாரிஸ் ஒப்பந்தப்படி 2030ம் ஆண்டுக்குள் 1.5 பாகை செல்சியஸ் அளவுக்கு வெப்பநிலையை குறைக்க வேண்டும். ஆனால் தற்போது (2021) 1.1 பாகை செல்சியஸ் அளவுக்கு வெப்பநிலை ஏற்கனவே உயர்ந்துள்ளது. எதிர்பார்த்ததைவிட மிக அதிக வேகத்தில் புவி வெப்பமடைதல் அதிகரித்து வருகிறது

- கடந்த 2018ல் கணித்ததைவிட 10 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அதாவது 2030க்குள் சராசரி வெப்பநிலை உயர்வு 1.5 பாகை செல்சியஸை தாண்டி விடும்

- கடல் மட்டம் உயர்ந்து வரும் வேகமும் தீவிரமாக உள்ளது. கடந்த 1901 – 1971 காலக்கட்டத்தில் ஆண்டுக்கு 1.33 மி.மீ. அளவுக்கு கடல் உயர்ந்தது. அதுவே 2006 – 2018ல் ஆண்டுக்கு 3.7 மி.மீ. ஆக உயர்ந்து உள்ளது

- கடந்த 1950க்குப் பின் மிக கடுமையான சீதோஷ்ண நிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடும் வெப்பம் நிலவுவது அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் கடும் குளிர் நிலவுவது குறைந்துள்ளது

- மனிதர்கள் ஏற்படுத்தியுள்ள இயற்கை சீர்கேடுகளே இந்த மோசமான நிலைக்கு காரணம். அதிலும் நகர் பகுதிகள், புவி வெப்பமடைதலால் பெரிய பாதிப்பை சந்திக்கும். குளிர்ச்சியூட்டும் நீர் நிலைகளோ, பசுமை வளங்களோ இல்லாததே நகர் பகுதிகளில் அதிக வெப்பம் நிலவுவதற்கு காரணம்

- கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவு, 50 ஆண்டுகளில் இல்லாத அளவு என்பதெல்லாம் இனி குறிப்பிட முடியாத அளவுக்கு தகிக்கும் வெப்பம், கடும் மழை, வறட்சி போன்ற இயற்கை சீற்றங்கள் இனி அதிக அளவில் குறைந்த இடைவெளியில் ஏற்படும்

- இது போன்ற சீற்றங்கள் எதிர்பாராத பகுதிகளில் எதிர்பாராத நேரத்தில் ஏற்படும். மேலும் இரண்டு இயற்கை சீற்றங்கள் ஒரே நேரத்தில் ஏற்படுவதும் அதிகரிக்கும். அதாவது கடும் வறட்சியும், வெப்பமும் ஒரே நேரத்தில் நிகழும்.

**ஓடவும் முடியாது ஒளியவும் முடியாது**

உலக நாடுகளைச் சேர்ந்த 234 விஞ்ஞானிகள் இணைந்து 3,000 பக்க அறிக்கையை வெளியிட்டுள்ளனர். ஒவ்வொரு பக்கமும் உலக நாடுகளுக்கு விடுக்கும் எச்சரிக்கையாகவே உள்ளது. இது குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் (António Guterres) கூறியுள்ளதாவது:

"இந்த அறிக்கை மனித குலத்துக்கான சிவப்பு எச்சரிக்கை (Red alert). இருப்பினும் உலக நாடுகளின் தலைவர்கள், 1.5 பாகை செல்சியஸ் அளவுக்கு வெப்பத்தை குறைப்பதற்கான கடும் இலக்கை எட்டுவர் என நம்புகிறேன். புவி வெப்பமடைதலை தடுக்க, குறைந்தபட்ச நடவடிக்கைகளில் இருந்தாவது முயற்சியை தொடக்குவோம். ஒவ்வொரு சிறிய நடவடிக்கையும் குறைந்தபட்ச

பலனையாவது அளிக்கும். ஒருபோதும் முயற்சிகளை கைவிட்டு விடக்கூடாது''

இந்த அறிக்கையை தயாரித்தவர்களில் ஒருவரான அமெரிக்க சூழலியல் ஆராய்ச்சி மைய மூத்த விஞ்ஞானியான லிண்டா மேர்னஸ் (Linda Mearns ), ''மிக மோசமான நிலையை நோக்கி செல்கிறோம் என்பது மட்டும் உறுதி. அதில் இருந்து நாம் எங்கும் ஓடவும் முடியாது. ஒளியவும் முடியாது. எந்த இடமும் பாதுகாப்பானதாக இருக்காது'' என எச்சரித்துள்ளார்.

கடந்த 10 தசாப்தங்களில், ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி மக்கள் வானிலை தொடர்பான பேரழிவுகளால் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர் என்று சர்வதேச தன்னார்வ அமைப்பான ஒக்ஸ்ஃபாம் (Oxfam) தெரிவித்துள்ளது. கடந்த 30 ஆண்டுகளில் இதுபோன்ற பேரழிவுகளின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாகவும் அந்த அமைப்பு கூறுகிறது.

2000ஆம் ஆண்டிலிருந்து பருவநிலை மாற்றம் தொடர்பான நிகழ்வுகளால் 12.3 இலட்சம் பேர் இறந்துள்ளதாகவும், 420 கோடி பேர் வறட்சி, வெள்ளம் மற்றும் காட்டுத்தீ ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஐ.நா மதிப்பிட்டுள்ளது.

**புவி வெப்பமடைவதன் எதிரொலி ஆட்டிக் (arctic) பனிப்பாறை உருக தொடங்கியது**

புவி வெப்பமடைவதால் ஆட்டிக் (arctic) பனிப்பாறை உருகும் அபாயம் குறித்து ஏற்கெனவே சர்வதேச அளவில் எச்சரிக்கை விடுக்கப்பட்ட சூழலில், இது குறித்த ஆராய்ச்சி மேற்கொள்ளும் குழுவின் தலைவர் மார்கஸ் ரெக்ஸ், தற்போது பனிப்பாறை உருகத் தொடங்கி விட்டதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கோடைகாலத்திலும் ஆட்டிக் பிராந்தியத்தில் உருகிய பனிப்பாளங்கள் இப்போது மறைந்துள்ளது பனி உருகுவதன் முதல் அடையாளமாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பனிப்பாறைகள் அடங்கிய சுரங்கப் பகுதியின் முனைகள் உருகத் தொடங்கியுள்ளது. இதனால் பனி உருகி கடல் மட்டம் உயரும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்றும் மார்கஸ் ரெக்ஸ் (Prof. Dr. Markus Rex) குறிப்பிட்டுள்ளார்.

ஆட்டிக் பிராந்தியத்தின் வடதுருவத்தில் 20 நாடுகளைச் சேர்ந்த 300 விஞ்ஞானிகள் பேராசிரியர் ரெக்ஸ் தலைமையில் ஆராய்ச்சி மேற்கொண்டனர். இக்குழுவினர் இப்பகுதியில் 389 நாள்கள் ஆராய்ச்சி செய்து கடந்த ஆண்டு ஒக்ரோபரில் ஜெர்மனிக்குத் திரும்பினர். இன்னும் சில ஆண்டுகளில் பனிப் பாறைகள் இல்லாத ஆட்டிக் கடல் பகுதி உருவாவதற்கான வாய்ப்பு உள்ளதாக ரெக்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இக்குழுவினர் தங்களது ஆராய்ச்சியின் முதல் அறிக்கையை இப்போது வெளியிட்டுள்ளனர். 2020 ஆம் ஆண்டு குளிர்காலத்தில் இருந்த சூழலைவிட தற்போது சூழல் மாறியுள்ளதாகவும், பனிப் பாளங்கள் ஆட்டிக் கடல் பகுதியில் 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அளவைக் காட்டிலும் பாதியளவு குறைந்து உருகி விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆட்டிக் பிராந்தியத்தில் பனி உருகுவதைத் தடுக்க உடனடியாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது குறித்தும் அவர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

# தலிபான் - சி.ஐ.ஏ தலைவர் காபுல் நகரில் இரகசியப் பேச்சு

அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏயின் தலைவர் மற்றும் தலிபான் தலைவருக்கு இடையே காபூல் நகரில் ஓகஸ்ட் 24ந் திகதி இரகசிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றிருப்பதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும், சி.ஐ.ஏ தலைவர் வில்லியம் பேர்ன்ஸ் (William Burns) மற்றும் தலிபான் தலைவர் முல்லா அப்துல் கானி பரதருக்கு (Moellah Abdul Ghani Baradar) இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்த சந்திப்புக் குறித்த செய்தியை தலிபான்கள் அல்லது சி.ஐ.ஏ இன்னமும் உறுதி செய்யவில்லை.

நியூயோர்க் டைம்ஸ், வாஷிங்டன் போஸ்ட், ஏ.பி, ரோய்டர்ஸ் மற்றும் என்.பீ.ஆர் சேவை உட்பட ஊடகங்கள் இந்த சந்திப்புப் பற்றி செய்தியை வெளியிட்டபோதும் அது பற்றிய மேலதிக தகவல்களை வெளியிடவில்லை. இந்தச் சந்திப்பு உறுதி செய்யப்படும் பட்சத்தில் ஓகஸ்ட் 15 ஆம் திகதி தலிபான்கள் காபூலை கைப்பற்றிய பின்னர் அமெரிக்கா மற்றும் தலிபான்கள் இடையே இடம்பெறும் உயர்மட்ட சந்திப்பாக இது அமையும்.

ஆப்கானில் இருந்து ஆயிரக்கணக்கான வெளிநாட்டினர் மற்றும் ஆப்கானியர்கள் வெளியேறுவதற்காக காபூல் விமானநிலையத்தில் தற்போது சுமார் 5,800 அமெரிக்க துருப்புகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் அமெரிக்கத் துருப்புகள் ஆப்கானில் நிலைகொள்ளும் காலக்கெடு மற்றும் வெளியேற்ற நடவடிக்கைகள் தொடர்பிலேயே இரு தரப்புக்கும் இடையே பேச்சுவார்த்தை இடம்பெற்றிருக்கலாம் என்று வாஷிங்டன் போஸ்ட் குறிப்பிட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு தலிபான் அமைப்பை உருவாக்கிய நால்வரில் ஒருவராக முல்லா பரதர் உள்ளார். அவர் 2010 ஆம் ஆண்டு அமெரிக்க – பாகிஸ்தான் கூட்டு நடவடிக்கை ஒன்றில் பிடிபட்டு எட்டு ஆண்டுகள் சிறை அனுபவித்தவர்.

2019 ஆம் ஆண்டு தொடக்கம் அவர் கட்டாரில் உள்ள தலிபான் அரசியல் அலுவலகத்தில் தலைவராக செயற்பட்டார். அமெரிக்கா மற்றும் நேட்டோ துருப்புகள் ஆப்கானிலிருந்து வெளியேறும் டோஹா ஒப்பந்தத்திலும் அவரே கையெழுத்திட்டிருந்தார்.

2020 இல் அவர் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் தொலைபேசியில் பேசியதன் மூலம், அமெரிக்க ஜனாதிபதியுடன் நேரடியாக பேசிய முதலவவது தலிபான் தலைவராகவும் முல்லா பரதர் விளங்குகின்றார்.

''மிகவும் அதிகமான வெறுப்புடனும் எரிச்சலுடனும் எழுதாதீர்கள். உங்களுடைய மற்ற கட்டுரைகள் எவ்வளவு அதிகமான விளைவை ஏற்படுத்தின என்பது உங்களுக்குத் தெரியும். எதார்த்தமான முறையில் நயத்துடனும் நகைச்சுவையுடனும் லேசாக எழுதுங்கள். அன்பே... உங்கள் பேனாவைக் காகிதத்தின் மீது மென்மையாக ஓடவிடுங்கள். சில சமயங்களில் உங்கள் பேனா, தடுக்கிவிழுந்து விடுமானால், அதோடு சேர்ந்து உங்கள் வாக்கியம் மட்டுமின்றி நீங்களும் விழ நேரலாம். கவலை வேண்டாம். உங்கள் சிந்தனைகள் பழைய காலத்துப் படைவீரர்களைப்போல அதிகமான உறுதியுடனும் துணிவுடனும் விறைப்பாக நிற்கின்றன. அவர்களைப்போல அவை சாகலாம். ஆனால், சரணடையாது''

**–ஜென்னி மார்க்ஸ், மார்க்ஸிற்கு எழுதியது**

# பெரு எழுகிறது: பாடசாலை ஆசிரியரிலிருந்து ஜனாதிபதி வரை



**51 வயது நிரம்பிய பெட்ரோ காஸ்டிலோவை கொண்டாடிக் கொண்டிருக்கின்றது பெரு.**

தென் அமெரிக்கக் கண்டனத்தின் பெரிய நாடுகளில் ஒன்று பெரு. பல்லாண்டு காலமாக நடந்து கொண்டிருந்த அமெரிக்க கைக்கூலி ஆட்சிக்கு எதிராக எழுந்த வெகுஜன மக்கள் கிளர்ச்சிகளின் பின்னணியில் இடதுசாரிக் கட்சியான "சுதந்திரப் பெருகட்சி" (Free Peru) , கடந்த ஜூன் 6 அன்று நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிவாகை சூடியுள்ளது. இக்கட்சியின் தலைவராக, பெரு நாட்டின் உழைப்பாளி மக்களது நேசத்திற்குரிய தலைவராக ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றிருப்பவர் தான் பெட்ரோ காஸ்டிலோ (Pedro Castillo). இவர் ஒரு பரடசாலை ஆசிரியர். 2017ஆம் ஆண்டு அரசுக்கு எதிராக நாடு முழுவதும் உள்ள ஆசிரியர்களை அணிதிரட்டி போராட்டக்களத்தில் இறக்கியவர். அப்போது முதல் ஆசிரியர்களின் தலைமையில் பெருவில் நடைபெற்ற எண்ணற்ற இயக்கங்களில் ஒரு தலைசிறந்த தொழிற்சங்கத் தலைவராக மிளிர்ந்தவர் காஸ்டிலோ.

மார்க்சியத் தத்துவத்தை உயர்த்திப் பிடிக்கும் கட்சி சுதந்திரப் பெரு கட்சி. இக்கட்சியின் தலைவராகவும் உயர்ந்த காஸ்டிலோ, ஜனாதிபதி தேர்தலில் 50.12 சதவீதம் வாக்குகளைப் பெற்று மாபெரும் வெற்றி பெற்றுள்ளார். எதிர்த்துப் போட்டியிட்ட பெண் வேட்பாளரான கெய்க்கோ புஜிமோரி (Keiko Fujimori) 49.87 சதவீதம் வாக்குகளை பெற்றுள்ளார். கெய்க்கோ புஜிமோரி, பெரு நாட்டில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியாக எதேச்சதிகார ஆட்சி நடத்திய தீவிர வலதுசாரியான ஆல்பர்ட்டோ புஜிமோரியின் (Alberto Fujimori) மகள் ஆவார். ஜூன் 6 அன்று தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் இடதுசாரி வேட்பாளரை எந்தவிதத்திலும் வெற்றி பெற விடக்கூடாது என்ற நோக்கத்துடன் வலதுசாரிகள் பல்வேறு நாசகாரியங்களில் ஈடுபட்டனர். ஆனால், ஆசிரியர்கள், கிராமப்புற உழைப்பாளி மக்கள், இளைஞர்கள், பழங்குடிமக்கள் உள்பட அனைத்து தரப்பு மக்களும் ஆசிரியர் காஸ்டிலோவுக்கு பேராதரவு தெரிவித்தனர்.

இந்நிலையில், தேர்தல் வாக்குகள் எண்ணப்பட்டபோது, கெய்க்கோ புஜிமோரியின் ஆதரவாளர்கள் பெரும் மோதலை உருவாக்க முயற்சி மேற்கொண்டனர். தலைநகர் லிமா உள்பட பல்வேறு நகரங்களில் வன்முறையில் ஈடுபட்டனர். பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவித்தனர். தேசிய தேர்தல் ஆணையம் மீது கெய்க்கோ புஜிமோரி பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். காஸ்டிலோவுக்கு ஆதரவாக தேர்தல் ஆணையம் செயல்படுவதாக அவர் கூறினார். ஆனால், புஜிமோரி முன்வைத்த குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்பதை தேசிய தேர்தல் ஆணையம் நிரூபித்தது. இதனிடையே பெரும்பான்மை வாக்குகள் பெற்ற காஸ்டிலோவை ஜனாதிபதியாக அறிவிக்குமாறு தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தி கடந்த ஜூலை 7 அன்று பெரு நாட்டின் அனைத்து முற்போக்கு சமூக, அரசியல் அமைப்புகள் பொது வேலைநிறுத்தத்தை நடத்தின. ஆயிரமாயிரம் மக்கள் பெரு நாட்டின் வீதிகளில் திரண்டு காஸ்டிலோவுக்கு ஆதரவாக முழக்கமிட்டனர். இதனிடையே வலதுசாரி சக்திகளுக்கு ஆதரவாக தேர்தல் முடிவுகளை சீர்குலைக்கும் பொருட்டும், நாட்டின் அதிகாரத்தை கலகம் செய்து கைப்பற்றும் பொருட்டும் பெருவின் இராணுவப் படைகளுக்குள் ஆதரவை உருவாக்கிட புஜிமோரி முயற்சி மேற்கொண்டார். ஆனால், அவர் படுதோல்வி அடைந்தார். பெரு பாதுகாப்புத்துறை இந்த விசயத்தில் கண்காணிப்புடன் செயல்பட்டது. இராணுவத் தளபதிகள், அரசியலமைப்புச் சட்ட நிறுவனங்களுக்குரிய மரியாதையை உறுதி செய்வதாகத் தெரிவித்தனர். கலக முயற்சிகளிலிருந்து தாங்கள் விலகியே நிற்பதாக அறிவித்தனர்.

இத்தகைய பின்னணியில் வேறு வழியின்றி ஜூலை 19 அன்று, தேர்தல் ஆணையத்தின் முடிவுகளை ஏற்பதாக கெய்க்கோ புஜிமோரி அறிவித்தார். முன்னதாக புஜிமோரி குறிப்பிட்ட தொகுதிகளில் மறு வாக்கு எண்ணிக்கை நடத்தி, ஒட்டுமொத்தத்தில் புஜிமோரியை விட காஸ்டிலோ 44 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குகளை கூடுதலாக பெற்றிருக்கிறார் என்பதை உறுதி செய்தது. இந்த நிலையில், பெட்ரோ காஸ்டிலோ, ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதாக பெரு தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வ அறிவிப்பினை வெளியிட்டது. இந்த அறிவிப்பு பெரு நாட்டின் பெருவாரியான உழைப்பாளி மக்களின் மத்தியில் பெரும் மகிழ்ச்சியையும், மறுபுறத்தில் அந்நாட்டின் அரசியல் மற்றும் வர்த்தகத்துறையில் உள்ள ஆளும் வர்க்க ஆதரவாளர்கள் மத்தியிலும் அந்நாட்டைச் சூறையாடிக் கொண்டிருக்கும் பெரும் சுரங்கக் கம்பெனிகளின் கார்ப்பரேட் முதலாளிகள் மத்தியிலும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. உலகிலேயே மிக

அதிகமான தாமிரம் (செப்பு – Copper) உற்பத்தி செய்யும் இரண்டாவது பெரிய நாடு பெரு என்பது குறிப்பிடத்தக்கது.

“பெருவிய மக்களுக்கு மாற்றம் உறுதிப்படுத்தப் பட்டுவிட்டது. பெருவாரியான மக்களுக்கு நலன் பயக்கும்விதத்தில் அரசியலமைப்புச் சட்டம் மாற்றப்படுவதற்கு உறுதியாகிவிட்டது. இனி இங்கு ஏழ்மையை விரட்டிவிடுவோம். பெரு எழுகிறது” என்று லிமா நகரத்தின் வீதிகளில் இடதுசாரி ஆதரவாளர்கள் எழுச்சிமிகு முழக்கமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். “நாடு முழுவதும் உள்ள தலைசிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களை ஒன்றுதிரட்டுவோம். அவர்கள் இந்த நாட்டை மறுகட்டுமானம் செய்வதில் உறுதியோடு பணியாற்றுவார்கள். எங்களது மக்கள், ஒட்டுமொத்த மக்களின் நலன்களுக்காக தங்களையே அர்ப்பணித்துக் கொள்வதில் முதன்மையானவர்கள். மக்களின் ஆதரவோடும் உதவியோடும் அனைத்துஅரசியல் அமைப்புகளின் உதவியோடும் ஆலோசனை யோடும் பெரு நாட்டை மறு கட்டுமானம் செய்வோம்” என்று மக்களைப் பார்த்து முழங்குகிறார் ஜூலை 28 இல் புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்க உள்ள பெட்ரோ காஸ்டிலோ.

சுகாதாரத்திற்கும் கல்விக்கும் அதிகபட்ச நிதி ஒதுக்கீடுசெய்ய விரும்புகிறேன் என குறிப்பிடும் காஸ்டிலோ, இதற்கான நிதியை, சுரங்கத்துறையில் ஈடுபட்டுள்ள பெரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் மீது அதிகபட்ச வரி விதிப்பதன் மூலம் திரட்டுவோம் என்று உறுதிபடக் குறிப்பிடுகிறார். கியூபா மற்றும் வெனிசுவேலா ஆகிய நாடுகளில் மக்களுக்கான ஒரு கம்யூனிஸ்ட் முன்மாதிரி நடைமுறையில் இருக்கிறது. அவற்றின் படிப்பினை உள்வாங்கிக் கொண்டு நாங்கள் எங்களது சொந்த பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்கள் நலன் அடிப்படையில் திட்டங்களை அமுலாக்குவோம் என்றும் காஸ்டிலோ கூறுகிறார். இதனிடையே ஜனாதிபதி பதவியில் காஸ்டிலோ அமர்வது உறுதி என்ற நிலையில், அவர் முற்போக்காளர்களிடமிருந்து விலகி நிற்க வேண்டும் என்று அமெரிக்க ஆதரவு ஆளும் வர்க்க வட்டாரங்களிலிருந்து பல்வேறு வழிகளில் நிர்ப்பந்தங்களும் வரத் துவங்கியுள்ளன. இதன்பொருள் என்னவென்றால் கார்ப்பரேட்டுகள் மீது கை வைக்கக்கூடாது என்பதுதான். அந்தப் பாதையில் பயணித்தால் ஆட்சியை கவிழ்ப்போம் என்று பகிரங்கமாகவே ஆளும் வர்க்க ஆதரவாளர்கள் எழுதத் துவங்கியுள்ளனர் என்பதும் கவனிக்கத்தக்கது.

பெரு நாட்டில் கடந்த 200 ஆண்டுகளில் எண்ணற்ற இராணுவக் கலகங்கள் நடந்துள்ளன. சர்வாதிகாரிகள் பலர் கொடிய ஆட்சிகளை நடத்தியுள்ளனர். 1980 ஆம் ஆண்டுதான் பெருவில் அனைவருக்கும் வாக்குரிமை என்று உறுதி செய்யப்பட்டது. அதற்கு பிறகு 3 ஜனாதிபதிகள்தான் – ஜோஸ்லூயிஸ்ரிவரோ, அல்ஜான்ட்ரோ டோலெடோ, ஓலென்ட்டா ஹூமாலா – ஆகியோர் பதவி வகித்துள்ளனர். இந்தக் காலக்கட்டத்தில் ஏகாதிபத்திய ஆதரவு ஆளும் வர்க்க சக்திகளின் இலக்குக்கு உள்ளாகிய இவர்கள் ஆட்சி நடத்தியுள்ளனர். 1995க்குப் பிறகு 5 ஆண்டு காலம் புஜிமோரியின் சர்வாதிகார ஆட்சி நடந்தது. இந்தக் காலக்கட்டம் முழுவதிலும் எளிய மக்களின் நல்லாட்சிக்காக எண்ணற்ற போராட்டங்களை பெரு சந்தித்துள்ளது. ஹூமாலாவின் ஆட்சிக் காலத்தில், அவர் ஒரு இடதுசாரி சிந்தனையாளர் என்ற போதிலும் ஆளும் வர்க்கங்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாக மக்கள் நலத்திட்டங்களை அவரால் அமுலாக்க முடியவில்லை.

இத்தகைய அரசியல் பின்னணியில்தான் முதன் முறையாக மார்க்சிய சித்தாந்தத்தை உயர்த்திப்பிடிக்கும் சுதந்திரப் பெரு கட்சி ஆட்சிக்கு வந்துள்ளது. பெட்ரோ காஸ்டிலோ தலைமையில் பெரு எழுகிறது.

**-தீக்கதிர்** (ஜூலை 23, 2021)

# மூன்றாவது முறையை நிறுத்திவையுங்கள்: உலக சுகாதார மையம் மீண்டும் கோரிக்கை

**த**டுப்பூசி ஏற்றத்தாழ்வை சுட்டிக்காட்டி மூன்றாவது முறை தடுப்பூசி செலுத்தும் திட்டங்களை ஐரோப்பிய நாடுகள் நிறுத்தி வைக்குமாறு உலக சுகாதார மையத் தலைவர் டெட்ரோஸ் அதோனம் (Tedros Adhanom) கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏற்கெனவே கடந்த மாதமும் அவர் இதுபோன்றதொரு கோரிக்கையை முன்வைத்தார். ஆனால், அந்த கோரிக்கையை முன்வைக்கும்போதே இஸ்ரேல் மூன்றாவது முறை தடுப்பூசி செலுத்தும் பணியை ஆரம்பித்துவிட்டது.

ஜெர்மனி, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகள் உலக சுகாதார மையம் ஆரம்பநிலையிலேயே வேண்டுகோளை நிராகரித்துவிட்டது. இந்நிலையில் டெட்ரோஸ் அதோனம் ஓகஸ்ட் 23ந் திகதி ஹங்கேரியில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, ‘இரண்டு மாதங்களுக்காவது மூன்றாவது தடுப்பூசி போடும் திட்டத்தை நிறுத்தி வைக்கவும்’ என்று வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கூறுகையில், ‘தடுப்பூசி தானம் தொடர்பாக உண்மையிலேயே நான் மிகுந்த விரக்தியில் உள்ளேன். உலகின் பல நாடுகள் முதல், இரண்டாவது தடுப்பூசி செலுத்திக் கொள்ள வழியில்லாமல் தவிக்கும் சூழலில், சில நாடுகள் மூன்றாவது முறையை ஊக்குவித்துக் கொண்டிருக்கின்றன. உண்மையில் மூன்றாவது முறையாக போடும் தடுப்பூசிகளை ஏழை நாடுகளுக்கு தானமாகக் கொடுக்கலாம்.

இதுவரை உலகளவில் விநியோகம் செய்யப்பட்டுள்ள 5 பில்லியன் தடுப்பூசிகளில் 75% தடுப்பூசிகளை 10 நாடுகளே பயன்படுத்தியுள்ளன. தடுப்பூசி அநீதி காரணமாக கொரோனா வைரஸ் மேலும் பலமுறை உருமாறி அச்சுறுத்தும்.

இந்த உலகில் உள்ள அனைவரும் பாதுகாப்பான நபராக மாறும் வரை, எந்த ஒரு தனிநபரும் நான் பாதுகாப்பாக இருக்கிறேன் என்று கூறமுடியாது’ எனத் தெரிவித்தார்.

சர்வதேச தரவுகளின்படி கொவிட்-19 தொற்றுக்கு எதிராக உலக மக்கள் தொகையில் 25 வீதமானவர்களே தற்போது முழுமையாகத் தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர். 2020 பிற்பகுதியில் தடுப்பூசி செலுத்துவது ஆரம்பிக்கப்பட்டு எட்டு மாதங்களிலேயே இந்த மைல்கல் எட்டப்பட்டுள்ளது. ஆனால் ஹெய்ட்டி, யெமன், கொங்கோ மற்றும் சாட் போன்ற நாடுகள் மிகக் குறைவான தடுப்பூசி பெற்ற நாடுகளாக உள்ளன. இங்கு மக்கள் தொகையில் 0.01 வீதத்திற்கு குறைவானவர்களே முழுமையாக தடுப்பூசி பெற்றுள்ளனர்.

# ‘பென் அன்ட் ஜெர்ரிஸ்’ படைத்திருக்கும் முன்னுதாரணம்

புகழ்பெற்ற ஐஸ்கிரீம் (Ice cream) நிறுவனமான பென் அன்ட் ஜெர்ரிஸ் (BEN & JERRY’S), இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பாலஸ்தீனப் பகுதிகளில் தனது வர்த்தகத்தை நிறுத்திக் கொள்வதாகச் சமீபத்தில் அறிவித்தது. அமெரிக்காவைச் சேர்ந்த, யூதர்கள் நடத்தும் நிறுவனமான பென் அன்ட் ஜெர்ரிஸின் இந்த அறிவிப்பு இஸ்ரேலிய ஆட்சியாளர்களின் கடும் கண்டனத்தையும் சர்வதேச அளவில் விவாதத்தையும் உருவாக்கியுள்ளது. யூதர்களாக இருப்பதில் பெருமைப்படும் அதே நேரத்தில், இஸ்ரேல் அரசுக்கு ஆதரவாளர்களாக இருந்தாலும், அந்நாட்டின் சட்டவிரோத ஆக்கிரமிப்புக் கொள்கையை எதிர்க்கிறோம் என்ற தங்கள் நிலைப்பாட்டை அவர்கள் அறிவித்துள்ளனர். ஆக்கிரமிப்புப் பகுதிகளில் வர்த்தகத்தை நிறுத்திக்கொள்ளும் தங்கள் நிலைப்பாடு ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் வலுப்படுத்துவது என்றும் கூறியுள்ளனர்.

பேரிடர் சூழல்களிலும்கூட மக்களின் துயரங்களிலும் இலாபத்தை ஈட்டும் பெருநிறுவனங்களையே கண்டுவரும் சூழலில், பென் அன்ட் ஜெர்ரிஸ் ஐஸ்கிரீம் நிறுவனத்தின் நிறுவனர்களான கோஹனும் கிரீன்பீல்டும் (Ben Cohen, Jerry Greenfield ) தங்கள் வர்த்தகத்துக்கும் இலாபத்துக்கும் எதிரான முடிவொன்றை எடுத்துள்ளது அபூர்வமானது. தங்கள் நிலைப்பாடு குறித்து ‘தி நியூயார்க் டைம்ஸ்’ (The New York Times) இதழில் எழுதிய குறிப்பில், பரந்த பொது நலனை முன்னிட்டு, தங்கள் சக்தியையும் செல்வாக்கையும் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு நிறுவனங்களுக்கு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளனர்.

“சமூகத்தில் வர்த்தகம் என்பது மிக சக்திவாய்ந்த உறுப்புகளில் ஒன்று என்பதை நாங்கள் நம்புகிறோம். பரந்த பொது நன்மைக்காகத் தங்கள் சக்தியையும் செல்வாக்கையும் நிறுவனங்கள் பயன்படுத்த வேண்டியது அவற்றின் பொறுப்பு என்றும் கருதுகிறோம். தனிநபர்களின் வாழ்வில் உள்ளதைப் போலவே வர்த்தகத்தின் ஒரு பகுதியாக ஆன்மிக அம்சமும் இருக்கிறது என்பதை எங்கள் அனுபவத்தில் கண்டுணர்ந்துள்ளோம். கொடுக்கும்போதுதான் பெறவும் முடியும்.”




பென் அன்ட் ஜெர்ரிஸின் இந்த நடவடிக்கை புதிதொன்றும் அல்ல. உலக அமைதியை முன்னிட்டு அமெரிக்கா தனது இராணுவ நிதி ஒதுக்கீட்டைக் குறைத்துக்கொள்ள வேண்டுமெனத் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிறுவனம் இது. 1991இல் தொடங்கிய வளைகுடா போரையும் எதிர்த்த நிறுவனம் இது. தேசியப் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டில் ஒரு சதவீதம் பணத்தை உலகம் முழுக்க நடக்கும் சமாதான நடவடிக்கைகளுக்கு ஒதுக்கும்படி வலியுறுத்தும் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக ‘பீஸ் பாப்’ (Peace Pop) என்ற ஐஸ்கிரீம் குச்சியை அறிமுகப்படுத்தி, அதன் விற்பனையில் ஒரு சதவீதத்தைக் கொடுத்த நிறுவனம் இது.

***ஷங்கர்***

பென் அன்ட் ஜெர்ரிஸ் அளித்திருக்கும் அறிக்கையில், இஸ்ரேலின் ஜனநாயகப் பிராந்தியத்தையும் இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதியையும் பிரித்துக் காட்டியுள்ளது. இஸ்ரேலின் ஜனநாயகரீதியான எல்லைகளுக்கு வெளியே தங்கள் வர்த்தகத்தை நிறுத்துவது இஸ்ரேலைப் புறக்கணிக்கும் செயல் அல்ல என்றும் கூறியுள்ளது.

இரண்டாயிரமாவது ஆண்டில் பென் அன்ட் ஜெர்ரிஸ் நிறுவனத்தை நிர்வகிக்கும் பொறுப்பை யுனிலிவர் (Unilever) வாங்கியது. ஆனாலும், பென் அன்ட் ஜெர்ரிஸ் என்னும் வர்த்தகச் சின்னத்தையும் கொள்கைகளையும் சமூகரீதியான பொறுப்பையும் விட்டுக்கொடுக்காத நிலையிலேயே யுனிலிவருடனான ஒப்பந்தம் இன்னும் நீடிக்கிறது என்றும் கூறப்பட்டுள்ளது.

இலட்சியமும் சமூகப் பொறுப்பும்தான் பென் அன்ட் ஜெர்ரிஸின் இதயம் என்று அதன் நிறுவனர்கள் தங்கள் கடப்பாட்டை உறுதிசெய்துள்ளனர்.

அமெரிக்க மாகாணமான வெர்மாண்டில் (Vermont) செயல்படாத நிலையில் இருந்த பழைய எரிவாயு நிரப்பும் நிலையத்தில் 43 ஆண்டுகளுக்கு முன்னர் சிறிய கடையாகத் தொடங்கப்பட்ட நிறுவனம், பெரிய சின்னமாக நீடித்திருப்பதற்குத் தாங்கள் பகிர்ந்துகொள்ளும் மதிப்பீடுகள்தான் காரணம் என்று கூறியுள்ளனர். தாராளவாத எண்ணமுடைய இரண்டு நண்பர்களான பென் கோஹனும் ஜெர்ரி கிரீன்பீல்டும் சேர்ந்து புதிய வகை ஐஸ்கிரீம்களோடு, தங்கள் முற்போக்கு எண்ணங்களையும் அமெரிக்கா முழுவதும் பரப்ப உருவாக்கிய நிறுவனம்தான் பென் அன்ட் ஜெர்ரிஸ்.

அமெரிக்காவில் இஸ்ரேலின் நடவடிக்கைகளுக்கு எதிராகத் திரளும் மக்களின் மனநிலையையும் பிரதிபலிப்பதாகவே பென் அன்ட் ஜெர்ரிஸின் நடவடிக்கை பார்க்கப்படுகிறது. நிறவெறிக்கு எதிரான இயக்கம் நடக்கும்போதும் அமெரிக்காவில் உள்ள பெரிய நிறுவனங்கள் தங்களை அந்த இயக்கத்துடன் அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. நிறவெறிக்கு எதிராக அடித்தளத்திலிருந்து சாதாரண மக்களும் குரல்கொடுக்கத் தொடங்கிய போதுதான் அங்குள்ள நிறுவனங்களும் நிறவெறி எதிர்ப்பு இயக்கத்துக்கு ஆதரவாகக் களம் இறங்கின. சமீபத்தில் அமெரிக்காவை உலுக்கிய ‘ப்ளாக் லைவ்ஸ் மேட்டர்’ (Black Lives Matter) இயக்கத்துக்கும் நைக் (Nike) போன்ற சப்பாத்து நிறுவனங்கள் தங்கள் ஆதரவை வெளிப்படையாக அறிவித்தன.

கடந்த மே மாதம் காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 253 பாலஸ்தீனிய மக்களும், ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 12 இஸ்ரேலியர்களும் பலியானதைத் தொடர்ந்து, பென் அன்ட் ஜெர்ரிஸ் சமூக ஊடகங்களில் இருபது நாள் மௌனம் அனுஷ்டித்தது. அமெரிக்க வாக்காளர்களிடம், குறிப்பாக அமெரிக்காவில் வசிக்கும் யூத மக்களில் ஒரு பகுதியினர், இஸ்ரேலின் நடவடிக்கைகளைக் கண்டிக்கத் தொடங்கியுள்ளதைச் சமீபத்தில்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

மரணம் கடந்த வருடம் மார்ச் 28இல் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த வருடம் டிசம்பர் 31 வரை 204 பேர் வரையிலேயே மரணித்திருந்தனர். இவ்வருடம் மே 18 வரை இறப்பின் எண்ணிக்கை 1015 பேராகவே இருந்தது. ஆனால் கடந்த மூன்றே மாதத்தில் 7000 பேருக்கு மேல் மரணித்தது என்பதே, இலங்கை கொரோனா நெருக்கடியில் சிக்கியுள்ளது என்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

கொரோனா பரவல் அதிகரித்திருப்பதற்கு ஏற்ப, நோயாளிகளை உரிய முறையில் பராமரிக்க வசதிகள் போதாமை என்பது நாடு தழுவிய ரீதியில் சவாலாக இருந்து வருகின்றது. எனினும் நோயாளர்களைக் கண்காணிப்பதிலும், அவர்களுக்கான விஷேட வைத்திய வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் வைத்தியசாலைகளும் அவற்றின் கீழ் உள்ள சுகாதாரத் தரப்பினரும் இரவும் பகலும் அயராது செயற்பட்டு வருகின்றனர் என்று தெரியவருகின்றது. இதனால் கொரோனாவிலிருந்து குணமடைந்து வீடு திரும்புவோரின் தொகையும் ஓரளவு திருப்தி தருவதாக உள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு முதலாவது தடுப்பூசித் தொகுதி இந்தியாவிலிருந்து ஜனவரி 28ந் திகதி வந்தடைந்தது. இந்தத் தடுப்பூசி, Oxford–AstraZeneca என்ற பிரித்தானிய – ஐரோப்பிய தடுப்பூசியின் இந்தியத் தயாரிப்பான கோவாக்ஸ் (Covax) ஆகும். அதைத்தொடர்ந்து அமெரிக்கா 1.5 மில்லியன் மொடெர்னா (Moderna) தடுப்பூசிகளை அன்பளிப்பு செய்தது. இப்போது சீனத்தயாரிப்பான சினோபார்ம் (Sinopharm) தடுப்பூசிகளே அதிகளவில் ஏற்றப்படுகின்றன. இதுவரையில் இலங்கையில் 55% ஆனோர் குறைந்தது ஒரு முறையாவது தடுப்பூசியை ஏற்றிக் கொண்டுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் வீட்டுக்கு வீடு சென்று தடுப்பூசி வழங்கும் திட்டம் ஒன்றினை இலங்கை இராணுவம் மேற்கொண்டு வருகின்றது. தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்கு செல்ல எவரையாவது சார்ந்திருக்க வேண்டியிருக்கின்ற வயது முதிர்ந்தவர்களுக்கு இந்தத் திட்டம் மிகுந்த பலனையளிக்கின்றது. இந்தத் திட்டம் ஊடாக வரிசையில் நிற்கும் தேவை இல்லாததால், தடுப்பூசி நிலையங்களுக்குச் செல்வதால் ஏற்படும் தொற்று பரவல் சாத்தியங்களையும் குறைக்க உதவுகின்றது. இவ்வாறான இராணுவத்தின் நட்புரீதியான அணுகுமுறையானது, இலங்கையில் சமூகங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தினையும் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமேயில்லை.

கொரோனா தொற்றானது உடலில் குணப்படுத்த முடியாத பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியதாகும். அது இலகுவாக, வேகமாகப் பரவக் கூடியதாகும். ஒருவர் தமக்கு தொற்று ஏற்பட்டுள்ளதென்பதை விட, தன்னால் தன் குடும்பமும் அயலவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பொதுநல உணர்வு முக்கியமானது. சமூகவியல் நோக்கில் கூறுவதாக இருந்தால், பொறுப்புக் கூற வேண்டிய செயற்பாடு. இதுவே தொற்றுப்பரவலை தடுக்க எம்மைத் தயார்படுத்துவதாகும்.

கொரோனா வைரஸை துல்லியமாக கணிப்பது கடினம், உருமாறக்கூடியது. இந்த வைரஸ் கூடிய விரைவில் மறைந்து போகலாம் என்று நம்புவதற்கு மிகச்சொற்ப காரணங்கள் மட்டுமே உள்ளன என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். ஆனால் தொற்று பரவும் எண்ணிக்கை குறையலாம் என்றும், ஒரு கட்டத்தில் தொற்று இருக்கும், ஆனால் குறைந்த அளவில் இருக்குமெனவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். அதேபோன்று மருத்துவமனையில் சேர்க்கப்பட வேண்டிய அளவிற்கு கடுமையான பாதிப்பு ஏற்படுவோரின் எண்ணிக்கை குறையலாம் என்றும், தீவிர சிகிச்சைக்குட்ப்படுத்தப்பட வேண்டியவர்கள் மிகக்குறைவான எண்ணிக்கையிலேயே இருப்பார்கள் என்றும் விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

தடுப்பூசி விஷயத்தில் மக்கள் மற்றும் அரசாங்கத்தைத் தாண்டி, பல்வேறு போலி செய்திகள், வதந்திகள், மக்களின் தேவையற்ற அச்சங்களையும் எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. தடுப்பூசி தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வரும் தகவல்கள் அனைத்தையும் நம்ப வேண்டாம். சரியான தெளிவின்றி கிடைக்கும் தகவல்களையெல்லாம் தயவுசெய்து பிறருடன் பகிர வேண்டாம்!

ஒரு புதிய நோய்க்கிருமி, நோய் எதிர்ப்பு சக்தி இல்லாத நபருக்குள் நுழையும்போது, அது பேரழிவை ஏற்படுத்தும். நோய் எதிர்ப்பு சக்தி மக்களிடத்தில் உருவாகியவுடன், நோய்க்கிருமியுடனான நமது உறவு மாறுகிறது. எனவே **நோய் எதிர்ப்பு சக்தியை நாங்கள் பெற்றுக்கொள்வதற்கு தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதே சிறந்த வழி! தடுப்பூசி ஏற்றுவதால் மாத்திரம் கொரோனாவிலிருந்து முழுமையாகப் பாதுகாப்பு பெறமுடியும் என்று கூறமுடியாது. தடுப்பூசியை ஏற்றிக் கொண்ட பின்னரும் உரிய சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். ஏனெனில் கொரோனா வைரஸ் திரிபுகளின் ஆபத்து எப்போதுமே தொடர்ச்சியாக இருந்து கொண்டேயிருக்கும்!**

எனவே பொது இடங்களில் முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியினைப் பேணுவது, கைகளை அடிக்கடி சவர்க்காரம், கிருமிகொல்லி கொண்டு சுத்தம் செய்வது போன்றவற்றைக் கட்டாயம் தொடர்ந்து கடைப்பிடிக்கவும். நோய்த்தொற்று அறிகுறிகள் தென்பட்டவுடன், உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைகளை நாடி மருத்துவ ஆலோசனைகளை, சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி எம்மை நாமே பாதுகாப்பதுடன், எமது சமுதாயத்தில் இடம்பெற்றுள்ள அனர்த்தத்தை தடுக்க எம்மால் முடிந்த முயற்சிகளை செய்வதோடு, எமக்காக களத்தில் நின்று சேவையாற்றும் மருத்துவர்களுக்கும் தாதியினருக்கும் உறுதுணையாக இருப்போம். இந்த சோதனையான காலகட்டத்தில் கண்ணுக்கு தெரியாத இந்த வைரஸில் இருந்து நாங்கள் விடுபட, இலங்கை மக்கள் ஒவ்வொருவரும் சிந்தித்து செயலாற்ற வேண்டிய தருணமிது.

---


**14ம் பக்கத்தொடர்ச்சி...**

வந்துள்ள கருத்துக் கணிப்புகள் வெளிப்படுத்துகின்றன. ஆனால், வழக்கம்போல, இஸ்ரேலின் அரசியல்வாதிகள் பென் அன்ட் ஜெர்ரிஸ் நிறுவனத்தை யூத எதிர்ப்பாளர்கள், தீவிரவாதிகள் என்று வசைபாடத் தொடங்கியுள்ளனர்.

இலாபமும் தனிநலனும் ஆளும் தரப்புகளின் முகம் கோணாமல் நடந்துகொள்வதுமே வர்த்தகம் என்று கருதப்படும் காலகட்டம் இது. இந்தப் பின்னணியில் பென் அன்ட் ஜெர்ரிஸ் போன்ற அபூர்வமான நிறுவனங்கள், குறுகிய தனிநலனைத் தாண்டி, பரந்த பொது நலன்தான் முக்கியமானது என்ற விழுமியத்துடன் தனது நலனுக்கு எதிராகவே முன்னுதாரணமான முடிவொன்றை எடுத்துள்ளது.

–**இந்து தமிழ்**, (ஓகஸ்ட் 25, 2021)

# சீன பொருளாதாரம்: கொரோனாவுக்கு பிறகு 18.3 சதவீதம் வளர்ச்சி



கடந்த 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டோடு ஒப்பிடும் போது, 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் சீன பொருளாதாரம் 18.3 சதவீதம் என மிகப் பெரிய வளர்ச்சியைக் கண்டிருக்கிறது.

சீனா, 1992 ஆம் ஆண்டு முதல் காலாண்டு வாரியாக ஜி.டி.பி (GDP) தரவுகளைப் பராமரிக்கத் தொடங்கியது. அன்றிலிருந்து சீன பொருளாதாரம் கண்ட மிகப் பெரிய காலாண்டு வளர்ச்சி இது தான்.

18.3 சதவீதம் மிகப் பெரிய வளர்ச்சி என்றாலும், ரோய்டர்ஸ் (Reuters) கருத்துக் கணிப்பில் பொருளாதார வல்லுநர்கள் கணித்திருந்த 19 சதவீதத்தை விட, சீன பொருளாதாரம் குறைவாகவே வளர்ச்சி கண்டிருக்கிறது.

கடந்த 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், கொரோனா ஊரடங்கு கட்டுப்பாடுகளால் சீன பொருளதாரம் 6.8 சதவீதம் வீழ்ச்சி கண்டது.

2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்கான தரவுகளை வெளியிட்ட சீனாவின் தேசிய புள்ளிவிவரப் பணியகம் 'சீன பொருளாதாரம் நல்ல தொடக்கத்தைக் கொடுத்திருக்கிறது' எனக் கூறியுள்ளது.

இருப்பினும் 'கொரோனா வைரஸ் இப்போதும் உலகம் முழுக்க தொடர்ந்து பரவிக் கொண்டு தான் இருக்கிறது. சர்வதேச அளவில் ஒரு நிலையற்ற தன்மையும், உறுதியற்ற தன்மையும் நிலவுகின்றன' எனவும் கூறியுள்ளது.

புள்ளியியல் துறை வெளியிட்ட மற்ற தரவுகளும், சீன பொருளாதாரம் தொடர்ந்து சீரடைந்து வருவதைச் சுட்டிக்காட்டுகிறது. எனினும் இந்த முறை மிக வலுவான வளர்ச்சி கண்டமைக்கு, இந்த ஆண்டின் தரவுகளை, கடந்த ஆண்டின் மிக பலவீனமான எண்களோடு ஒப்பிட்டதும் காரணம்.

கடந்த மார்ச் 2021 இற்கான தொழில் துறை உற்பத்தி, கடந்த ஆண்டைக் காட்டிலும் 14.1 சதவீதமாக அதிகரித்திருக்கிறது. சில்லறை விற்பனை 34.2 சதவீதம் அதிகரித்திருக்கிறது.

'முதல் இரண்டு மாதங்களுக்குப் பிறகு, மாதாந்திரக் குறியீடுகளான தொழில் துறை உற்பத்தி, நுகர்வு, முதலீடு என எல்லாமே வரிசையாக மார்ச் மாதத்தில் அதிகரித்திருக்கிறது' என 'ஒக்ஸ்ஃபோர்ட் எகனாமிக்ஸ்' என்கிற ஆலோசனை நிறுவனத்தின், ஆராய்ச்சி பிரிவின் ஆசிய பொருளாதாரத் தலைவர் லுயிஸ் குய்ஜ் கூறியுள்ளார்.

சீன அரசின் நிதி சார்ந்த மற்றும் கொள்கை ரீதியிலான உதவிகள் குறையும் போது பல துறைகளின் வளர்ச்சி வேகம் குறையும் என சில பகுப்பாய்வாளர்கள் கணித்துள்ளனர்.

தற்போது வெளியாகி இருக்கும் ஜி.டி.பி தரவுகள் பல துறைகளில் வளர்ச்சி கண்டிருப்பதாகக் கூறுகிறது. இந்த முதல் காலாண்டு தரவில், உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் தான் இதில் அதிக பங்கு வகிக்கின்றன. வருங்காலத்தில் இந்த வளர்ச்சி குறையலாம் என 'தி எகனாமிஸ்ட்' இதழின் புலனாய்வுத் துறைப் பிரிவின், சீனாவுக்கான முதன்மைப் பொருளாதார நிபுணர் யூ சு (Yue Su) கூறியுள்ளார்.

'உள்நாட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்த போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படாததால், இந்த ஆண்டின் மீதமுள்ள காலங்களில், வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் உள்நாட்டு தொழில் துறை செயல்பாடுகள் இப்போது போல ஒரு வலுவான வளர்ச்சியக் காட்ட முடியாமல் போகலாம்' எனவும் குறிப்பிட்டிருக்கிறார் யூ சு.

உலகின் இரண்டாம் பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட சீனாதான் கொரோனா தாக்கத்தால் பாதிக்கப்பட்ட முதல் நாடு. சீனா மிகக் கடுமையான கொரோனா விதிமுறைகளை விதித்தது மற்றும் வியாபாரிகளுக்கு உடனடியாக நிவாரணங்களை வழங்கியது போன்ற நடவடிக்கைகளால், கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு தொடர்ந்து நிலையாக சீன பொருளாதாரம் ஏற்றம் கண்டு வருகிறது.

கடந்த 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சீன பொருளாதாரம் மோசமாக செயல்படத் தொடங்கிய போதும், அவ்வாண்டின் முடிவில் சீன பொருளாதாரம் மட்டுமே வளர்ச்சியைக் காட்டியது குறிப்பிடத்தக்கது. 2020 ஆம் ஆண்டில் சீன பொருளாதாரம் 2.3 சதவீதம் வளர்ச்சி கண்டது. இது கடந்த பல தசாப்த காலத்தில் இல்லாத அளவுக்கு சீனாவின் மிகக் குறைந்த வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியால் சீனாவின் பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சி பாதையில் செல்லத் தொடங்கியுள்ளது.